# கிழக்குப் பாகிஸ்தானில கடும் சூருவளி; 165 பேர் உயிரிழந்தனர்

டாக்கா, ஏப். 15

கிழக்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட கடும் சூருவளி சுமார் 165 பேரை பலி எடுத்துள்ளது. ஆயிரப் பேர் படுகாயத்துக்குள்ளாகியுள்ளனர். மணிக்கு 90 மைல் வேகத்தில் வீசிய சூருவளியினுல் டாக்கா அல்லோலகல்லோலமாகியுள்ளது.

பல கட்டிடங்கள் இடிந்து நொருங்கி விழுந்தன. பல கோடி ரூபாய்கள் இதனுல் நஷ்டமேற்பட்டிருக்குமென செய்திகள்தெரிவிக்கின்றன.

டாக்காவிலிருந்து ஏழு மைல் தூரத்திலுள்ள கிராமமொன்று இந்த சூருவளியினுல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது இந்தக் கிராமத்தில் சுமார் 100 பேர் மாண்டுபோயினர் டாக்கா மத்திய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒரு மணி நேரத்தில் 27 பேர் உயிரிழந்தனர். இன்னும் பலர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர். சூருவளியினுல் பாதிக்கப்பட்டு வீடிழந்து நிர்க்கதிக்குள்ளாகித் தவிக்கும் குடும்பங்களுக்கு உடனடி உதவி அளிக்கும் படி பாக். புதிய அதிபர் யாஹ்யாகான் உத்தரவிட்டுள்ளார்.


Registered as a Newspaper in Ceylon

வார மலர் ★ விலை சதம் 20



பாலக்காடு
RVG
பீடிகளையே
உபயோகியுங்கள்



# ஈழநாடு

EELA NADU



மில்க்வைற்
நீல சோப்
10 சதக் கட்டி
வாங்கி அதிக லாபம்
அடையுங்கள்



மலர் 11 | சௌமிய சித்திரை 4 | முஹறம் 28 | (16-4-69) | புதன்கிழமை | இதழ் 64


# பருத்தித்துறை இ. போ. ச. ஊழியர்கள் வேலை நிறுத்தம்

## இரத்தம் தோய்ந்த துணியில் சலவைக்குறி

யாழ்ப்பாணம், புதன்

ஒட்டுமடம் சந்திக் கருகாமையில் இரத்தம் தோய்ந்து கிடந்த துணிகள் சம்பந்தமாக எந்தத் துப்புமே பொலிசாருக்குக் கிடைக்கவில்லையாயினும் துணிகளிலிருந்து சில சலவைக் குறிப்புகளைப் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

இரத்தம் தோய்ந்த பாய், தலையணை, சாரம் ஆகிய மூன்றும் வைத்திய பரிசோதனைக்காக இன்று கொழும்பு ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட விருக்கின்றன.

துணிகளில் கண்டுபிடிக்கப்பட்ட சலவைக் குறி அடையாளம் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் துப்புத் துலக்க அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

இதனைப் பூரணமாகத் துப்புத்துலக்க பொலிஸ்நாய்கள் இங்கு கொண்டுவரப் படலாம் என உயர்தர பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கொக்குவில், ஆனைகோட்டைப் பகுதிகளில் பொலிசார் தீவிர விசாரணை நடத்திவருகின்றனர். (கா. நி.)

## டுப்செக் மாஸ்கோ செல்வார்

பிராக், ஏப். 15

செக்கோஸ்லவாக்கிய சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. டுப்செக் ரஷ்யத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடாத்த மாஸ்கோ செல்லவிருப்பதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிராக்கில் செச். மத்திய குழுக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது. அதற்கு முன்னதாக டுப்செக் மாஸ்கோ செல்வார் எனத் தகவல் தெரிவிக்கின்றன.

## சாரதி பாதுகாப்பு அதிகாரி பஸ்ஸில் தாக்கப்பட்டார்களாம்

யாழ்ப்பாணம், புதன்

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த சுமார் 300க்கும் மேற்பட்ட ஊழியர்கள் நேற்றுக்காலை முதல் திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். பஸ் சாரதி ஒருவரும், இ.போ.ச. பாதுகாப்பு அதிகாரி ஒருவரும் கடமையிலிருந்தபோது பிரயாணி ஒருவரால்தாக்கப்பட்டதாகக்கூறப்படும்சம்பவத்தைத் தொடர்ந்தே இவர்கள் வேலைநிறுத்தத்திலீடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

நேற்றுக் காலை இவ்வேலை நிறுத்தம் ஆரம்பமானதால் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, பருத்தித்துறை-கொடிகாமம்வீதி, பருத்தித்துறை-அச்சுவேலி, பருத்தித்துறை - கீரிமலை பஸ்சேவைகள் நேற்றிலிருந்து முற்[illegible] துள்ளது.

புலோலியில்வைத்து ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸில் [illegible] போவுக்குச் சென்று சம்பவம்பற்றி சம்பந்தப்பட்ட ஊழியர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

இ. போ. ச. தலைவர் திரு. விஜேசேகரா நேரில் வந்து விசாரணை நடத்தும்வரை வேலைக்குத் திரும்புவதில்லை என வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.

இச்செய்தி அச்சுக்குப் [illegible] என்றும் கூறுகிருர்கள்.

நேற்று ஒருசாரதிக்கு மாறி மாறி மூன்று பஸ்களில் சேவை செய்ய வேண்டிய நிலையேற்பட்டது.

பஸ் சேவை இல்லாத காரணத்தால் பஸ் நிலையத்தில் நிற்க வேண்டிய பிரயாகள் வான் காலையில் முற்றுக்கை யிட்டுள்ளனர். ஒரு சில வான்கள் பாதிக்கப்பட்ட பிரயாணிகளை ஏற்[illegible]

## சிசுக் கொலை வழக்கு

## இளம் பெண் பிணையில்

## 2 கோடி 30லட்சம் நெல் உற்பத்தியாகும்



தமிழரசுக் கட்சித் தலைவர்களுடன் தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி.

## 'தொண்ணூறு வீதம் தீண்டாமை ஒழிந்துவிட்டது'

உடுப்பிட்டி, செவ்.

''தீண்டாமைக்குச் சாவு மணி அடிப்போம். தீண்டாமையைக் குழிதோண்டிப் புதைப்போம். போராட்டத்தின் மூலம் சமூக ஏற்றத் தாழ்வை ஒழித்துக் கட்டுவேம் என்று கோஷமிடுபவர்களுக்கு உண்மையில் தீண்டாமை ஒழியவேண்டும்

யத்தார்மீக ரீதியில் கடமைப்பட்டவை. இவைகளை நாம் பயன் படுத்தத் தயங்கக்கூடாது. எமக்கிடையே சொந்த விருப்பு வெறுப்புக்கள் இருக்கும் வேற்றுமைகளிலும் ஒற்றுமை காண்பதே சிறப்பு''

திரு. த. இராசலிங்கம் பேசுகையில் ''இன்று சிலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட விருக்கின்றன. துணிகளில் கண்டுபிடிக்கப் பகுதிகளில் பொலிசார் தீவிர விசாரணை நடத்திவருகின்றனர். (கா. நி.)

## சிசுக் கொலை வழக்கு இளம் பெண் பிணையில்

யாழ்ப்பாணம், புதன்

சிசுக்கொலை வழக்கின் எதிரியான இளம் பெண்ணொருவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். ஊர்காவற்றுறை மாஜிஸ்திரேட் திரு. எம். ஜமீல் முன்னிலையில் நடைபெற்ற வழக்கொன்றிலேயே இது நடைபெற்றது.

இவ் வழக்கில் அராலி, தொட்டைக்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மகள் அம்பிகாபதி அம்மா என்பவர் இவ்வருடம் தைமாதம் 30-ம் திகதிக்கும் மாசி மாதம் 2-ம் திகதிக்குமிடையில் தனக்குப் பிறந்த பெண்குழந்தையை வேலணையில் வைத்துக் கொலைசெய்ததாக ஊர்காவற்றுறைப்பொலிசாரால் குற்றம்சாட்டப் பட்டிருந்தது.

டாக்டர் உட்பட 8 பேர் சாட்சியமளித்த பின்னர் எதிரிதரப்பு வழக்கறிஞர் தளையசிங்கம் யோகநாதனின் குறுக்கு விசாரணையின் பின்னர் எதிரியை 2500 ரூபா பிணையில்செல்ல அனுமதித்த மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை இம் மாதம் 28-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (கா. நி.)

விக்கின்றன.

## 2 கோடி 30லட்சம் நெல் உற்பத்தியாகும்

கோட்டை, செவ்.

இந்த சிறுபோகத்தில் 2 கோடி 30 லட்சம் புசல் நெல் விளையுமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற வருடத்தை விட இத்தொகை 40 லட்சம் புசலால் அதிகரிக்கப் படுமென நம்பப்படுகிறது.

ஆசிய நாடுகளில் நெல் உற்பத்தியில் பாகிஸ்தான் மலேஷியாவுடன் இலங்கையும் முன்னணி வகிப்பதாக அறிக்கையொன்று கூறுகிறது.

......

## இலங்கையில் பிரிட்டிஷ் நிபுணர்

கொழும்பு, செவ்.

பிரிட்டிஷ் உஷ்ணவலய உற்பத்திப்பொருள் நிறுவனத்தின் பயிற்சி அதிகாரியான திரு. எல். எச். கிறீன் வூட் பார்டன் நேற்று முன்தினம் இலங்கை வந்து சேர்ந்தார். இவர் கொழும்பில் ஒருவார காலம் தங்கியிருப்பார்.

உணவு உற்பத்தித்துறையில் இலங்கையர்களுக்கு பயிற்சி வசதிகள் அளிப்பது, இத்துறையில் இலங்கையின் தேவைகளுக்கு உதவியளிப்பது போன்ற விஷயங்கள் பற்றி திரு. பார்டன், இலங்கை அரசாங்கத்துடன் கலந்தாலோசனை நடத்துவார். அதேவேளை பிரிட்டிஷ் உஷ்ணவலய உற்பத்திப்பொருள் நிறுவனத்தால் ஏற்கனவே அளிக்கப்பட்ட பயிற்சிகள் எத்தகைய பலாபலனை அளித்துள்ளதென்பதை அவர் நேரில் கண்டறிவார்.

துறை வீதி, பருத்தித்துறை-கொடிகாமம்வீதி, பருத்தித்துறை-அச்சுவேலி, பருத்தித்துறை - கீரிமலை பஸ்சேவைகள் நேற்றிலிருந்து முற்றாக ஸ்தம்பித்துள்ளது.

புலோலியில்வைத்து ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் இருந்த சாரதியும், பாதுகாப்பு அதிகாரி ஒருவரும் தாக்கப்பட்டதாகவும், தாக்கிய பிரயாணியை உடன் கைதுசெய்ய வேண்டுமெனவும் இ. போ. ச. தரப்பில் பொலிசாரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த சாரதிகள், கண்டக்டர்கள், லிகிதர்கள், பழுதுபார்ப்பவர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் என்ஜினியரிங்பகுதி ஊழியர்கள் உட்பட சுமார் 300 க்கும் மேற்பட்ட சகல ஊழியர்களும் இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. சில்வா சம்பவம்நடந்த இடத்தைச் சென்று பார்வையிட்டார். வட பிராந்திய இ. போ. ச. முகாமையாளர் திரு. வேலுப்பிள்ளை நேற்று பருத்தித்துறை டிப்போவில் ஊழியர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

இ. போ. ச. தலைவர் திரு. விஜேசேகரா நேரில் வந்து விசாரணை நடத்தும்வரை வேலைக்குத் திரும்புவதில்லை என வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை வேலை நிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. (கா. நி)

### பிரயாணிகள் கஷ்டம்

இமையாணன், செவ்.

பஸ்சேவை இல்லாத காரணத்தினால் பரீட்சைக்குச் செல்லவேண்டிய உத்தியோகத்தர்களும், மாணவர்களும் அரசாங்க அலுவலகங்களில் சேவை புரியும் உத்தியோகத்தர்களும் உட்பட அநேக பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் வாடகைக் கார் அமர்த்திச் செல்ல வேண்டியேற்பட்டது.

இன்று மாத்திரமின்றி நேற்றும் பருத்தித்துறை டிப்போவில் அநேக பஸ்கள் சேவை செய்யவில்லை. இதற்குக்காரணம் பஸ்கள் பழுதடைந்ததாகவும் உப இறுப்புச் சாமான்கள் இல்லை சேவை செய்ய வேண்டிய நிலையேற்பட்டது.

பஸ் சேவை இல்லாத காரணத்தால் பஸ் நிலையத்தில் நிற்க வேண்டிய பிரயாணிகள் வான் காலையில் முற்றுக்கை யிட்டுள்ளனர். ஒரு சில வான்கள் பாதிக்கப்பட்ட பிரயாணிகளை ஏற்றிச் செல்கின்றன. வான்களில் உள்புறத்தில் இடமின்மையால் மிதிபலகை மாத்திரமன்றி மான் ஏற்றும் பின் கதவுகளிலும் ஏறிச் செல்கின்றனர்.

## கல்வி சுற்றுலா

யாழ்ப்பாணம், புதன்

வேலணை மத்திய மகா வித்தியாலய மாணவர்களும் ஆசிரியைகளும் அகில இலங்கை ரீதியிலான கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு இன்று வேலணையிலிருந்து புறப்படுகின்றனர்.

இவர்கள் சரித்திரம் புவியியல் சம்பந்தமான இடங்களுக்கும் புனித இடங்களுக்கும் செல்வார்கள்.

''தீண்டாமைக்குச் சாவு மணி அடிப்போம். தீண்டாமையைக் குழிதோண்டிப் புதைப்போம். போராட்டத்தின் மூலம் சமூக ஏற்றத் தாழ்வை ஒழித்துக் கட்டுவேம் என்று கோஷமிடுபவர்களுக்கு உண்மையில் தீண்டாமை ஒழியவேண்டும் என்பதில் எவ்வித அக்கறையும் கிடையாது. சிறுபான்மைச் சமூக மக்களின் பிரச்னைகள் சவால்கள்மூலம் தீர்க்கப்படக்கூடியன அல்ல என்பதை அனைவரும் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்''.

மேற்கண்டவாறு வடமராட்சிச் சமூக சேவா சங்க புனரமைப்பு விழாவுக்கும், சங்கத்தின் 40 - வது ஆண்டு விழாவுக்கும் தலைமை வகித்துப் பேசுகையில் தலைவர் திரு. ஆ. ம. செல்லத்துரை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''தீண்டாமையை ஒழிப்பது எங்கள் வேலையல்ல. அது தேவையுமில்லை. தொண்ணூறு வீதம் தீண்டாமைஒழிந்து விட்டது, காலக்கிரமத்தில் தீண்டாமை என்பது பழைய கதையாகிப் போய்விடும். தமிழர் மத்தியிலேயே பின் தங்கியுள்ள மக்களைக் கைதூக்கி விட வேண்டும் என்ற சேவை மனப்பான்மையும், விறுவிறுப்பும் அவசியம். எமது சமூக முன்னேற்றத்திற்காக உழைப்பதாகச் சொல்லிக் கொண்டு இன்று பல சங்கங்கள் இயங்குகின்றன். அவை ஒரு சிலரின் அரசியல் ஆதாயத்துக்காகப்பண்பாடு ஆற்ற முறையில், அருவருக்கத் தக்க காரியங்களில் ஈடுபட்டுவருகின்றன.

எமது சேவா சங்கம் அரசியல் சார்பு இல்லாதது. எல்லா அரசியல் கட்சிகளும் எங்களுக்குச் சேவை செய்மைப்பட்டவை. இவைகளை நாம் பயன் படுத்தத் தயங்கக்கூடாது. எமக்கிடையே சொந்த விருப்பு வெறுப்புக்கள் இருக்கும் வேற்றுமைகளிலும் ஒற்றுமை காண்பதே சிறப்பு''

திரு. த. இராசலிங்கம் பேசுகையில் ''இன்று சிலர் மிகைப்படுத்தி எமது சமூக நிலையை வர்ணிப்பது போல் நாம் நிற்கவும் நிழலின்றி இருக்கவும் இடமின்றித் தவிக்கும்துர்ப்பாக்கிய நிலையில் இல்லை, அது 50—60 வருடங்களுக்கு முந்திய நிலைமையாக இருக்கலாம்.

சிறுபான்மைச் சமூகத்தவரின் முன்னேற்ற வேகம் போதாது எமக்கென ஒரு நல்ல ஸ்தாபனம் இருக்குமேயானல் நாம் அரசாங்கத்துக்கு எமது நிலைமையை எடுத்து விளக்கி ஆண்டாண்டுதோறும் புதிய பல உத்தியோகத்தர்களைத் தோற்றுவிக்க முடியும்.

சில பெரிய அரசாங்க அதிகார உத்தியோகங்களுக்கு நாம் தகுதியுடையவர்களாக இருந்தும் காரணமில்லாமல் புறக்கணிக்கப்பட்டுக் கொண்டே வருகின்றோம். இந்நிலையை மாற்றி அமைக்க எங்களால் முடியும் அதற்கு இந்த ஸ்தாபனம் மிக மிக அவசியம்''

சைவப்புலவர் திரு. சி. வல்லிபுரம், வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பி திருவாளர்கள் த. இரத்தினம், வ. தர்மலிங்கம், த. மணிசுந்தரம் மு. வேதாரணியம், செ. சதானந்தன், ஜே. எஸ். கிறிஸ்ததாஸ், க. நடேசன், க. சீனித்தம்பி, ஆ. கிருஷ்ணபிள்ளை, இ. இரத்தினராசா ஆகியோர் ஆலோசனைக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

## இத்தாலி சிறைச்சாலை கட்டடங்களுக்கு தீ

### கைதிகள் ஆர்ப்பாட்டம்

ரோம், ஏப். 15

இத்தாலி சிறைச்சாலைகளில் கலவரங்கள் நடந்துள்ளன. 1500 கைதிகள் இரு சிறைக் கூடங்களுக்குத் தீ வைத்தனர்.

சிறையில் நல்ல வசதிகள் செய்து கொடுக்கவில்லை என தெரிவித்து இவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடாத்தினர். சிறைப் பாதுகாவலர் ஒருவரைத் தாக்கி படுகாயம் விளைவித்தனர். மெத்தைகளையும் உடைகளையும் எரித்தனர். பெண்கள் சிறைக்குள்ளும் நுழைய முயன்றனர்.

இத்தாலிய பொலிசார் அங்கு வந்து சேர்ந்ததால் நிலை கட்டுக்கடங்கியது.

## 22,500 பேர் இந்தியா திரும்பினர்

கொழும்பு, செவ்.

சென்றமாதம் வரை இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிலுள்ள 37,425 இந்தியவம்சாவழியினர் இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்துள்ளனர். சென்ற மாதத்தில் மட்டும் 3,000 பேர் தம்மை இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்துள்ளனர்

கடந்த நாலரை வருடங்களில் 22,500 பேர் இங்கிருந்து இந்தியா திரும்பியுள்ளனர்..

## வடக்கிலும் ஐ.தே.க. போட்டி?

கொழும்பு செவ்.

அடுத்த பொதுத் தேர்தலில் வடக்கிலும் கிழக்கிலும் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட வேண்டுமென அதன் ஆதரவாளர்கள் பலர் கட்சியின் தலைமைப் பீடத்தை கேட்டுக் கொண்டிருப்பதாக ஐ. தே. கட்சி பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமைப் பீடம் இதனை வரவேற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக்கட்சி சில தொகுதிகளில் போட்டியிட்டது. ஆனல் அடுத்த பொதுத் தேர்தலில் கூடுதலாக சில தொகுதிகளில் போட்டியிடலாமென அந்தப் பிரமுகர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியுடன் உறவு முறிந்து விட்டதால், கல்முனையில் ஐ. தே. கட்சி அபேட்சகர் ஒருவர் நிறுத்தப்படுவார் என்றும் கூறப்படுகிறது.

வடமாகாணத்தில் ஐ.தே. கட்சி அபேட்சகர்களைச் சில தொகுதிகளில் நிறுத்தும்படி ஐ. தே. க. ஆதரவாளர்கள் பலர் கேட்டுக் கொண்டுள்ளனரென்றும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்தார்.

ஐ. தே. கட்சி அடுத்த பொதுத் தேர்தலுக்கான நிதியை இன்று சேகரிக்க ஆரம்பித்துள்ளது.

## வேலையில்லா பிரச்னையை தீர்க்கவழி சொல்கிறர் தஹா

காலி, செவ்வாய்

''குடிசைக் கைத்தொழில்களிலும் சிறு கைத்தொழில்களிலும் ஈடுபட்டு உழைக்க முன்வரவேண்டும். இதுவே வேலையில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதற்கேற்ற ஒரே வழியாகும்.''

இவ்வாறு உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா காலிவெலிவட்ட மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கைத்தொழிற் பொருட்காட்சியின் இறுதிநாள் விழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

குடிசைக் கைத்தொழிலை நாட்டில் விருத்திசெய்வதனல் பலருக்கு வேலைவாய்ப்பளிக்கப்படுவதோடு குடிசைக் கைத்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரமும் உயர்த்தப்படும். தற்பொழுது அரசாங்கம் சிறு கைத்தொழில்களை வளர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

இப் பொருட்காட்சியில் கண்காட்சிக்கு வைக்கப்பட்ட பொருள்கள் யாவும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுபவைகளுக்குச் சிறிதும் தரத்தில் குறைந்தவைகளல்ல. இங்குள்ள சில பொருட்கள் இறக்குமதி செய்யப்படுபனவற்றிலும் பார்க்க சிறந்தவையாகவுள்ளன. இத்தகைய பொருட்காட்சிகள் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நடைபெறவேண்டும்.

உள்ளூரில் உற்பத்திசெய்த ஜவுளிகள், வேறும் பல குடிசைக் கைத்தொழிற் பொருட்கள் ஆகியன இப்பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

## மாவோவின் வாரிசு லின்பியோ நேற்று ஊர்ஜிதம்

பீகிங், ஏப். 15

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 9-வது மகாநாடு சீன பாதுகாப்பு அமைச்சர் திரு. லின்பியோவை மாசேதுங்கின் வாரிசாக நேற்று ஊர்ஜிதம் செய்தது.

திரு. லின்பியோ வாரிசாக ஊர்ஜிதம் செய்யப்பட்டது அறிவிக்கப்பட்டபோது கூடியிருந்த 1500 பிரதிநிதிகள் பலத்த கரகோஷம் செய்தனர்.

புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை மகாநாடு நேற்று ஏற்றுக் கொண்டது.

பாதுகாப்பு அமைச்சர் லின்பியோவுக்கு 62 வயது.

சீன ராணுவத்தின்மீது இவருக்கு நேரடி அதிகாரமுண்டு. திறமையும் ஆற்றலுமிக்கவர் இவர் எனப் பீகிங் வானொலி வர்ணித்தது.

இன்றைய மகாநாட்டில் சீனகம்யூனிஸ்ட் கட்சி புதிய மத்திய குழு ஒன்று தெரிவு செய்யப்படும்.

## 'பிரிட்டனுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களை நிறுத்துக'

### அங்குய்லா அதிபர் வேண்டுகோள்

அங்குய்லா, ஏப். 15

பிரிட்டனுக்கு எதிரான எல்லாவித ஆர்ப்பாட்டங்களையும் நிறுத்தும்படி ஆறாயிரம் மக்களை மட்டும் கொண்டுள்ள அழகிய அங்குய்லாத்தீவின் ஜனாதிபதி திரு. வெப்ஸ்டர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அங்குய்லாதீவின் சகல பகுதிகளுக்கும் சென்று திரு. வெப்ஸ்டர் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் இருக்கும்படி கேட்டுக் கொண்டதுடன், ஆர்ப்பாட்டங்களை நிறுத்திக் கொள்வதால், விரைவில் அவர்கள் தமக்குசுதந்திரம் வழங்கிவிடுவார்களென தெரிவித்தார்.

## காந்திமகன் காலமானர்

பம்பாய், செவ்.

மகாத்மா காந்தியடிகளின் புதல்வர் ராம்சால் காந்தி நேற்று நள்ளிரவு பம்பாயில் காலமானர். இவர் கடந்த மூன்று வாரகாலமாக காமாலை நோயினல் அவதியுற்று வந்தார். இவருக்கு வயது 73.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிலம்புச் செல்வர்' ம. பொ. சி.

பாமா ராஜகோபால்

தமிழேமூச்சாய், தமிழே வாழ்வாய், தமிழே உயிராய் வாழ்ந்து கொண்டிருக்கும் அந்தத் தமிழறிஞர் என்னுடன் பேசிக்கொண்டிருந்தபோது கேட்ட கணீர் என்ற குரல் இப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கிறது

ம. பொ. சி. என்று தமிழுலகமே அன்பொழுக அழைக்கும் தமிழக சட்டமன்ற உறுப்பினர் 'சிலம்புச்செல்வர்' சிவஞான கிராமணியாரின் இனிய சந்திப்பு என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிறது.

''தமிழன் எந்த நாட்டில் பிறந்தாலும் அந்த நாட்டுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். அவன் எந்த நாட்டில் வாழ்கிருனே அந்த நாட்டின்மீது பற்றுள்ளவனக வாழவேண்டும்''- 'தமிழ்நாடு' பெயர்மாற்றத்திற்குக் காரணமான தன்மான வீரர் உதிர்த்த முத்துக்கள் இவை.

தமிழைப்பற்றி அவர் பேச ஆரம்பித்ததுமே அவர் வாயை மறைத்துக் கொண்டிருக்கும் 'பென்னம்பெரிய' மீசை துடித்துக் கொண்டிருந்தது.

## ஈழத்தமிழர்உரிமை பெற்றுவாழ...

''ஈழத்தமிழர்கள் உரிமை பெற்றுவாழ என்ன வழி சொல்கிறீர்கள்?'' என்று கேட்டுவிட்டு அவரைப் பார்த்தேன்.

போராடிச் சிறை பல கண்ட அவர் உணர்ச்சி வசப்பட்டு ஏதாவது சொல்லுவாரென்று எதிர்பார்த்தேன்.

அமைதியாகப் பதில் சொன்னார்.

''சிங்களவர் தமிழர் என்ற வேற்றுமையை மறந்து, இரு இன மக்களிடையேயும் நட்புணர்வு ஏற்பட வேண்டும். இருவேறுமொழி பேசுபவர்களாக இருந்தாலும், இரு இனத்தவர்களும் இந்த நாட்டவர்கள். இதை மறந்துவிடாது ஒரே நாட்டவர் என்பதை மனதில் கொண்டு, பரஸ்பரமாக, நல்லுறவை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

ஈழத்தின் அரசியலை நன்ருகத் தெரிந்து உணர்ந்து கொண்டிருக்கிருர் என்பது அவர் சொன்ன இந்தப் பதிலிலிருந்து தெரிந்து கொள்ளக்கூடியதாகவிருந்தது.

## சுவையான வாழ்க்கை

அச்சுத் தொழிலாளியாக வாழ்க்கையை ஆரம்பித்து, படிப்படியாக உயர்ந்தவர் கிராமணியார். காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து காமராஜர் போன்ற தலைவர்களுடன் இணைந்து அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார். காங்கிரஸ் நடத்திய போராட்டங்கள் பலவற்றில் கலந்துகொண்டு சிறை சென்ருர். சென்னை காங்கிரஸ் கமிட்டிச் செயலாளராகவும் இருந்தார். சென்னை காப்பரேஷன் தேர்தலில் வெற்றி பெற்ருர். காங்கிரஸ், மேல்சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் தமிழக தலைவர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார்.

1947ம் ஆண்டு தமிழரசுக் கழகத்தை ஆரம்பித்தார். 1957ல் ஆண்டு மீண்டும் காங்கிரஸுக்குத் தனது முழுமனதான ஆதரவை அளித்தார். 1967ல் மறைந்த மேதை அண்ணு கிராமணியாரை அரசியலுக்குள் இழுத்தார். தி. மு. க. வுக்குத் தனது பூரண ஒத்துழைப்பை அளித்து, தமிழரசுக் கழகத்தில் நின்று போட்டியிட்டு தமிழக சட்டமன்ற உறுப்பினராஞர்.

'செங்கோல்' அவரது இதயக்குமுறல்; சிலப்பதிகாரம் அவருடன் இரண்டறக் கலந்தது. அவர் பெயர் முன்ஞல் ஒட்டிக் கொண்டிருக்கும் 'சிலம்புச் செல்வர்' இதற்குச் சான்று. அவர் பெற்ற செல்வங்கள் மூன்று; மூத்த புதல்வஞன திருநாவுக்கரசு, புத்தக வெளியீட்டாளராக இருக்கிருர். மற்ற இருவரும் பெண்கள். கண்ணகியென்றும் மாதவியென்றும் அவர்களுக்குப் பெயரிட்டிருக்கிருர்.

அழகு தமிழில் அவ[...] பேசிக்கொண்டிருக்கும்

விளையாடிக்கொண்டிருந்தது.

''அரசியல் பிரச்னைபற்றி, நான் பேசிஞல் அது 'பாலிடிக்ஸ்' ஆகிவிடும். இங்கு இப்போதுள்ள பிரச்னை பெரும் பிரச்னையாகிவிடும்'' -நான் கேட்ட 'அரசியல் கலப்பு' கேள்வியொன்றுக்கு இப்படிச் சொல்லிவிட்டுச் சிரித்தார்.

கேட்கலாமா, கேட்கக் கூடாதா என்று எண்ணிக் கொண்டிருந்த ஒரு கேள்வியைக் கேட்டேவிட்டேன்.

''தமிழகத்திலிருந்துவரும் அறிஞர்களை வரவேற்று, தக்க மதிப்புக் கொடுத்து, கௌரவிப்பதுபோன்று தமிழகத்துக்கு வரும் அறிஞர்களை நீங்கள் கௌரவிப்பதில்லையென்ற ஒரு பெருங்குறை ஈழத்துத் தமிழ் மக்களிடம் இருக்கிறது....?'' என்று கேட்ட கேள்வியை நான் முடிக்கு முன்னரே அதற்கு விளக்கம் தந்துவிட்டார்.

## ஈழத்தறிஞர்களை மதிக்கிருேம்

''தவருன கருத்து இது. ஈழத்தமிழர்களுக்கும், தமிழ்நாட்டுக்குமிடையில் ஏதோ அரசியல்தொடர்பு இருப்பதாக சிங்களத் தலைவர்கள் எண்ணுவது போன்ற ஒரு தப்பானகருத்துத்தான்இது. ஈழத்திலிருந்து வந்த நல்ல அறிஞர்களைத் தமிழகம் வரவேற்கத்தவறியதில்லை. ஆறுமுகநாவலர், கதிரவேற்பிள்ளை, விபுலானந்த அடிகளார் போன்ற ஈழத்தறிஞர்களை வரவேற்று, கௌரவித்திருக்கிருேமென்பதை யாடும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது. நாவலர், தமிழகத்திலேயே இராமலிங்க சுவாமிகளுக்கு எதிராக இயக்கம் நடத்தியிருக்கிருர்கள் என்ருல் பாருங்களேன்! இப்போதுகூட ஈழத்திலிருந்து நல்லறிஞர்கள் வரும்போதெல்லாம் அவர்களுக்கு உரிய இடம் அளித்தே வருகிருேம். பண்டிதர் இரத்தினம் போன்றவர்கள் அங்கு பல மேடைகளில் [...]

ஒரு சிறு பிரசங்கமேசெய்துவிட்டார் 'சிலம்புச்செல்வர்.'

## நாவலர் சிலை அமைப்பேன்

''உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் ஈழத்தறிஞர் நாவலருக்குச் சிலை அமைக்க மறந்துவிட்டீர்களே?'' என்றேன்.

''மற்ற அறிஞர்களின் சிலைகளை உருவாக்கித்தந்தார்கள். அவர்களுக்குச் சிலை அமைக்கப்பட்டது. நாவலருடைய சிலையை உருவாக்கித் தாருங்கள். நானேமுன்னின்று சிலை நிறுவிவிடுகிறேன்'' என்று சொன்னவர்- சிரித்துக்கொண்டே, ''உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டில் அமைக்கப்பட்ட சிலைகள 'கதை' முடிந்துகொண்டிருக்கிறது. நாவலர் தப்பிவிட்டார்...'' என்ருர்.

பாரதியார் சிலைகாற்றுக்கு விழுந்து நொருங்கியதைத்தான் அவர் இப்படியாகக் குறிப்பிட்டார்.

''தமிழரசுக்கட்சி அழைத்ததால்தான் இங்கு வந்தீர்களா, வேறு தமிழ்க்கட்சிகள் அழைத்திருந்தால், அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டிருக்கமாட்டீர்களா?''

## கலாச்சார இயக்கம்

''தமிழரசுக் கட்சியின் ஆரம்ப காலம்தொட்டே அந்தக்கட்சியின் நடவடிக்கைகளை மிகவும் உன்னிப்பாகக் கவனித்துவந்திருக்கிறேன். தமிழரசுக் கழகம் போன்று அது வெறும் அரசியல் இயக்கமாக இல்லாமல், கலாச்சாரத்தை வளர்க்கும் இயக்கமாகவும் உள்ளது. அன்றியும் வேறு எந்தக்கட்சியும் என்னை அழைக்கவில்லை.

அடுத்து இதே சம்பந்தப்பட்ட கேள்வியைக் கேட்டேன். ''இதற்கு மேலும் சொல்லவேண்டுமா? 'பாலிடிக்ஸ்' ஆகிடுமே!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்.

## கூட்டுமுயற்சி வேண்டும்



படப்பிடிப்பு: ஏ. வி. எம்.

நாடு அரசாங்கம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா?''

''இதற்கெல்லாம் அரசாங்கங்களை நம்பியிருக்கக் கூடாது. உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடந்தது. அரசாங்கங்கள் அந்த மகாநாட்டை ஏற்பாடுசெய்யவில்லையே! வேண்டுமாஞல் எடுக்கும் முயற்சிக்கு அரசாங்கம் ஆதரவு அளிக்கும். முழு உதவியையும் அளிக்குமென்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. கூட்டு முயற்சியிஞல் ஈழத்துத் தமிழர்களும், தமிழ் நாட்டவர்களும் இலக்கியப் பாலத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். அப்படியான முயற்சி நடைபெறும்போது தமிழ்நாடு அரசாங்கம் நிச்சயம் உதவி அளிக்கும். நானே முன்னின்று எல்லாவற்றையும் செய்வேன்.''

## மலையகத் தமிழர் பிரச்னை

மலையகத் தமிழர்கள் நிலைபற்றி சிலம்புச் செல்வர் மிகவும் அக்கறையுடன் பேசிஞர். ''இந்தியாவுக்கு வருவதற்கு இங்குள்ள இந்திய வம்சாவழியினர் அஞ்சுவதாகவும் அந்தமான் போன்ற தீவுகளுக்கு அனுப்பிவிடுவார்கள் என்ற வதந்தியே அச்சத்திற்குக் காரணமென்றும் இங்கு பேசிக்கொள்ளப்படுகிறது'' என்றதற்கு ''அப்படியொன்றும் அஞ்சவேண்டியதில்லை. தமிழக அரசு அங்கு வருபவர்களுக்கு குடியிருக்க நல்ல இடமும் தொழில் வசதியும் செய்துகொடுக்கப் பலவிதமான நடவடிக்கைகளை எடு[...]

அவருடன் பேசிக்கொண்டிருக்கும்போது நேரம் போவதே தெரியவில்லை. நீண்டகாலம் பழகியவர் போல மிகவும் நெருக்கமாகப் பழகிஞர்.

தமிழகப்பக்கமாகக் கதையைத் திருப்பினேன். சில கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

## கருணுநிதி எப்படி?

''கலைஞர் கருணுநிதியின் நிர்வாகம் எப்படியிருக்கிறது?''

''அருமையாக நடாத்துகிருர் கலைஞர். சகல திறமையுமுள்ள ஆற்றல் மிக்கவர் அவர்.''

''தமிழக மந்திரிசபை மாற்றத்தின்போது உங்களுக்கும் ஒரு மந்திரிப் பதவி கிடைக்கலாமென்ற செய்தி பலமாக அடிபட்டதே என்ன நடந்தது?''

''மந்திரிப் பதவியைஅளிப்பதும், அளிக்காமல் விடுவதும் அவர்கள் விருப்பம். நான் போய்க் கேட்டிருந்தால்தானே அதுபற்றி என்ஞல் சொல்லமுடியும். எனக்கு மந்திரிப்பதவி தரயோசித்தது உண்மைதான். பின்னர் அந்தப் பிரச்னை அப்படியே போய்விட்டது. அவ்வளவு தான்!''

தமிழ்நாடு முழுவதும் ஆகஸ்டில் போராட்டம் ஒன்று நடாத்தப்போவதாக ம. பொ. சி. அறிவித்திருக்கிருரல்லவா?

மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கோரி போராட்டம் நடாத்தப்போவதாகத் தெரிவித்திருக்கிருர். அது [...]

# ஜனநாயகத்தின் சிறப்பு

மக்கள் அனைவரின் உடல் வலிமையையும், பொருளாதார வசதிகளையும், ஆத்மீக ஆற்றலையும் பொது நலனுக்காக ஒன்று திரட்டிப் பயன்படுத்தும் இயல்தான், அந்தக் கலைதான் ஜனநாயகமாக இருக்க வேண்டும்

உண்மையான ஜனநாயக அமைப்பில் ஒவ்வொருவரும் சொந்தமாய் சிந்திப்பதற்கு கற்றுக் கொடுக்கப்படுகிருர்கள். இந்த உண்மையான புரட்சி எவ்வாறு ஏற்படும் என்பது எனக்குத் தெரியாது. ஆஞல் சீர்திருத்தம் அனைத்தும் தனி நபரது இல்லங்களில் தான் ஆரம்பமாகவேண்டும்.

ஒருநாட்டிலுள்ள மாறுபட்ட நலன்கள் அனைத்தையும் ஒவ்வொருவரும் தம்முள் வைத்துக்கொண்டு எடுத்துக் கொள்வதுதான் ஜனநாயகத்தின் சிறப்பு அம்சம். பிரத்யேக நலன்களுக்கென பிரத்தியேகப் பிரதிநிதித்துவம் இருக்கக் கூடாது என்பதல்ல பொருள். ஆஞல் இத்தகையபிரதிநிதித்துவம் இருந்

தீங்கு விளைவிக்காமல் ஒவ்வொருவரும் தாம்விரும்பியபடி நடந்து கொள்ளக் கூடிய நிலைமை இருந்தால் தான் அது உண்மையான ஜனநாயகமாகும். காலித்தனத்தை வைத்துக் கொண்டு பொது தர்மத்தை கட்டுப்படுத்த முடியாது.

மனிதகுலத்தில் மிகவும் வசதி குறைந்தவர்களுடன் ஒன்றுசேர வேண்டும். அவர்களைவிடக் கொஞ்சம் கூடச் சிறப்பான நிலையில் வாழ வேண்டும் என்ற விருப்பம் இருக்கக் கூடாது. அதே சமயத்தில் அந்த வாழ்க்கை நிலையை நம்மால் இயன்ற அளவுக்கு உயர்த்துவதற்கான மனப்பூர்வமான முயற்சி வேண்டும். இவை இருந்தால்தான் ஒரு ஜனநாயகவாதி என்று அழைத்து கொள்ள முடியும். ஒரு ஜனநாயகவாதி எப்பொழுதும் ஒழுங்குக் கட்டுப் பாட்டில் நம்பிக்கை வைத்திருப்பார். மனிதன் இயற்றிய சட்டங்களுக்கும் ஆண்டவனின் சட்டங்களுக்கும் மனமுவந்து அடிபணியும் இயல்பு உள்ளவர்களுக்குத்தான் ஜனநாயக முறை எளிதில்

— மகாத்மா காந்தி —

தால் தான் அதுஜனநாயகம் என்று வைத்துக் கொள்ளக்கூடாது. உண்மையில் ஓர் அன்பின் குறையைத்தான் இது எடுத்துக் காட்டும். இந்தியாவின் உண்மையான ஜனநாயக அமைப்பில் கிராமம்தான் அடிப்படை அம்சம். 20 பேர் மையத்தில் உட்கார்ந்து கொண்டு உண்மையான ஜனநாயகத்தை நடத்திவிட முடியாது. ஒவ்வொரு கிராமத்தையும் சேர்ந்த மக்கள் கீழ்நிலையிலிருந்துதான் ஜனநாயகத்தை நடத்தமுடியும்.

மக்கள் எதைநம்புகிருர்களோ, அவர்கள் எதை விரும்புகிருர்களோ அவற்றைப் பொறுத்தவரை ஜனநாயக அமைப்பில்கோழைத்தனத்துக்கு இடமில்லை. அவர்களது கோரிக்கைகளுக்குப் பிரதிநிதிகள் உருவம் கொடுத்து, அவற்றைப் பூர்த்தி செய்யவேண்டும். லட்சக் கணக்கான மக்களின் சாதகமான மனப்போக்கு பல போராட்டங்களில் வெற்றிபெற உறுதுணையாக

கைகூடும். ஜனநாயகத்திற்கு தொண்டு செய்ய விரும்புவோர், முதலில் ஜனநாயகத்தின் இந்த இன்றியமையாத தன்மை இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளவேண்டும். அதோடு ஒரு ஜனநாயகவாதி, தன்னலமற்ற முறையில் செயலாற்றவேண்டும். தம்மைப் பற்றியோ, கட்சியைப் பற்றியோஅவர் சிந்திக்கக் கூடாது. ஜனநாயகத்தைப் பற்றித்தான் சிந்திக்க வேண்டும். அதைப்பற்றித்தான் சுவை காணவேண்டும்.

## அதிகாரமும் மக்களும்

நாட்டிற்குச் சேவை செய்வதற்காக ஊழியர்களுக்கு அரசியல் அதிகாரம் வேண்டியதில்லை என்று நான் பல தடவை கூறியிருக்கிறேன். ஆஞல் மக்கள் யாரை ஆட்சியில் அமர்த்துகிருர்களோ, அவர்களுடன் இடைவிடாத தொடர்பு கொண்டிருக்க வேண்டும். இது மிக எளிதானது. ஏனென்ருல், ஆட்சியில் இருப்பவர்கள் ஒரு [...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேயும் நட்புணர்வு ஏற்பட வேண்டும். இருவேறுமொழி பேசுபவர்களாக இருந்தாலும், இரு இனத்தவர்களும் இந்த நாட்டவர்கள். இதை மறந்துவிடாது ஒரே நாட்டவர் என்பதை மனதில் கொண்டு, பரஸ்பரமாக, நல்லுறவை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஈழத் தமிழினம் நிச்சயமாக வாழ்ந்தே தீரும்.''

மூத்த புதல்வனை திருநாவுக்கரசு, புத்தக வெளியீட்டாளராக இருக்கிறார். மற்ற இருவரும் பெண்கள். கண்ணகியென்றும் மாதவியென்றும் அவர்களுக்குப் பெயரிட்டிருக்கிறார்.

அழகு தமிழில் அவ பேசிக்கொண்டிருக்கும் போதும், ஆங்கிலமும் இடையிடையே புகுந்து

ராக இயக்கும் நடத்தியிருக்கிறார்கள் என்றால் பாருங்களேன்! இப்போதுகூட ஈழத்திலிருந்து நல்லறிஞர்கள் வரும்போதெல்லாம் அவர்களுக்கு உரிய இடம் அளித்தே வருகிறோம். பண்டிதர் இரத்தினம் போன்றவர்கள் அங்கு பல மேடைகளில் சொற்பொழிவாற்ற ஏற்பாடு செய்துகொடுத்துள்ளோம்......''- இப்படி

அடுத்து இதே சம்பந்தப்பட்ட கேள்வியைக் கேட்டேன். ''இதற்கு மேலும் சொல்லவேண்டுமா? 'பாலிடிக்ஸ்' ஆகிடுமே!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்.

## கூட்டுமுயற்சி வேண்டும்

''தமிழுலகத்துக்குப் பொதுவான ஒரு தமிழ்ச் சொல் அகராதியைத் தமிழ்

றும் இங்கு பேசிக்கொள்ளப்படுகிறது'' என்றதற்கு ''அப்படியொன்றும் அஞ்ச வேண்டியதில்லை. தமிழக அரசு அங்கு வருபவர்களுக்கு குடியிருக்க நல்ல இடமும் தொழில் வசதியும் செய்துகொடுக்கப் பலவிதமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. வதந்தியெல்லாம் வெறும் பூச்சாண்டி'' என்றார்.

ஒன்று நடாத்தப்போவதாக ம. பொ. சி. அறிவித்திருக்கிறாரல்லவா?

மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கோரி போராட்டம் நடாத்தப்போவதாகத் தெரிவித்திருக்கிறார். அது பற்றி அவரிடம் கேட்ட போது, மத்திய அரசாங்கத்

(5ம் பக்கம் பார்க்க)

அவர்களது கோரிக்கைகளுக்குப் பிரதிநிதிகள் உருவம் கொடுத்து, அவற்றைப் பூர்த்தி செய்யவேண்டும். லட்சக் கணக்கான மக்களின் சாதகமான மனப்போக்கு பல போராட்டங்களில் வெற்றிபெற உறுதுணையாக இருந்திருக்கிறது.

**உண்மை ஜனநாயகம்**

மற்றவர்களது உயிருக்கோ, சொத்துக்கோ

ஆனால் மக்கள் யாரை ஆட்சியில் அமர்த்துகிறார்களோ, அவர்களுடன் இடைவிடாத தொடர்பு கொண்டிருக்க வேண்டும். இது மிக எளிதானது. ஏனென்றால், ஆட்சியில் இருப்பவர்கள் ஒரு சிலர்தான். ஆனால் மக்கள் தங்களது அதிகாரத்தை உணர்ந்து கொண்டு, அதை விவேகமாகப் பயன்படுத்

(5ம் பக்கம் பார்க்க)

---

### கம்பர் கவி விருந்து

# ராக்ஷஸ ஏகாதிபத்தியம் வீழ்ந்தது

விஸ்வாமித்திரனிடம் ராமன் என்ன பதில் சொல்கின்றான்.

ஐயன் அங்(கு) அது
கேட்டு, ''அறன் அல்லவும்
எய்தினல், அது
செய்க என்(று) ஏவினல்,
வேதம் எனக்கொடு
செய்கையன்றே,
அறம் செய்யும் ஆ(று)''

என்றான். மெய்ய என்றழைப்பதைப் பாருங்கள். சத்தியத்தைப் பரிசீலிப்பவன் என்பது குறிப்பாகத் தொனிக்கிறது. சிற்சில மஹா புருஷர்கள், தங்கள் வாழ்க்கை முழுவதையும் சத்தியசோதனைக்கே அர்ப்பணம் செய்து விடுகின்றனர். மஹான்களைச் சத்திய சேனாதிபதியாக மதித்து, அவர்களது வாக்கை வேத வாக்காக மதித்து, சிறந்த போர்வீரனாகமாறி, சத்தியத்திற்காகப் போராடுவது கடமையாகும்; தர்மமாகும். இந்த உணர்ச்சியோடு தான் தாடகையைக் கொல்வதும், அஹிம்சையாகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணித் தாடகை வதம் செய்யத் துணிகின்றான், ராமன். அப்படியும் அவள்தான் முதல் தாக்குதலை ஆரம்பிக்கின்றாள். சூலத்தை வீசுகின்றாளாம். ஆனால் ராமன் பாணத்தைத் தொட்டதையும், வில்லை வளைத்ததையும் எவரும் பார்க்கவில்லையாம். ஆனால் தாடகை வீசிய சூலம் தூள் தூளாகச் சிதறியதைத்தான் கண்டனராம். வில்லை வளைத்துப் பாணத்தைத் தொடுத்தான் என்று கூறாமல் பாணத்தைத் தொட்டு வில்லை வளைத்தான் என்று கூறுகிறான். ஏன்? அவ்வளவு

வேகமாய்க் காரியங்கள் நடந்து விடுகின்றன.

வாளியைத் தொட்டது
கோலவிற் கால
குனித்ததும் கண்டிலர்
காலனைப் பறித்(து)
அக்கடியாள் விட்ட
சூலம் அற்றன
துண்டங்கள் கண்டனா

சூலம் துண்டு துண்டானதும் தாடகை நிராயுதபாணி ஆகிவிட்டாள். எனினும் கொடியவள் சும்மா இருப்பாளா?

கல்லின் மாரியைக்
கைவகுத்தாள்-- அது
வில்லின் மாரியில்
வீரன் விலக்கினன்

இதன்மேல்தான் தாடகையைக் கொல்லவேண்டுமென்று இராமன் பாணத்தை விடுகின்றான். ராம பாணத்தின் கடியவேகத்தை உவமானம் கொடுக்கின்றான் கவிஞன். விஸ்வாமித்திரர் சபிக்கும்போது வரும் சுடு சொல்லா?

சொல்லொக்கும்கடியவேகச்
சுடுசரம், கரிய செம்மல்
அல் ஒக்கும் நிறத்தினள்
மேல்
விடுதலும் வயிரக் குன்றக்
கல் ஒக்கும் நெஞ்சில்
தங்காது
அப்புறம் கழன்று கல்லாய்
புல்லர்க்கு நல்லோர்
சொன்ன
பொருள் எனப்
போயிற்றன்றே

கல்வியேயில்லாத புல்லறிவாளருக்குப் பெரியோர் சொன்ன நன்மொழிகள் போல் போய் விட்டதாம் ராமபாணம். இப்படி முடிந்து விடுகிறது தாடகை வதம். இதுவே இராமனது **கன்னிப்போர்**. தாடகையுடன் யுத்தம் செய்யும் போது இராமனின் நீல மேகவர்ணமேனி, வீர கம்பீர்யத்துடன் மிளிர்கிறதாம். வீரநெடுங்குன்றம்

போல் இராமன் விளங்குகின்றான். பாணம் சூறவளி போல்கிளம்ப, கற்களை வீசும் அரக்கியோ, கல் மழை பொழியும் மேகம் போல் காட்சியளிக்கின்றாள்.

பொன்னெடும் குன்றம்
அன்னான்
புகர்முகப் பகழி என்னும்
அந்நெடுங் கால வன் காற்று
அடித்தலும், இடித்து
வானில்
கல்நெடு மாரிபெய்யக்
கடையுகத்(து) எழுந்த
மேகம்
மின்னொடும் அசனியோடும்
வீழ்வதே போல
வீழ்ந்தாள்

அந்திவேளைக்குச் சற்று முந்தி நடந்தது தாடகை வதம் என்கின்றார் வால்மீகி. அந்தக் குறிப்புக் கம்பன் நெஞ்சிலே ஊறி, தாடகையின் இரத்தப்பெருக்கை வர்ணிக்கும்போது,

அந்திமாலைத்-- தோன்றிய
செக்கர்வானம்
தொடக்கற்று வீழ்வது
ஒத்து

என்கின்றான் கவிஞன். அதைவிட, இன்னொரு பொருத்தமான உவமானமும் காட்டுகின்றான் கவிஞன். தாடகை வதத்தோடு தொடங்கிவிட்டதாம் துஷ்ட நிக்ரகம். இராவண சம்ஹாரத்தோடு முடிவதுதானே இராமாயணம்.

தாடகை சம்ஹாரம் இராவண சம்ஹாரத்திற்கு ஒரு துர்ச்சகுனம் என்கின்றார் கம்பன். உற்பாதமாக-ஆம் இராவணனது வெற்றிக் கொடி வீழ்ந்ததுபோல வீழ்ந்துவிட்டாளாம் தாடகை.

முடியுடை அரக்கர்க்(கு)
அந்நாள்
முந்தி உற்பாதமாக
படியிடை இற்றுவீழ்ந்த
வெற்றி அம்பதாகை
ஒத்தாள்

இராவண சர்வாதிகாரியின் ஏகாதிபத்ய ஆட்சி உன்னதநிலையில் இருக்கின்றது. அரண்மனையின் உப்பரிகையில் அவனது ஜயக் கொடி எவ்வளவு கம்பீரமாய்ப் பறக்கின்றது. துஷ்ட ராக்ஷதர்களின் வாழ்விற்கும் சாது ஜனங்களின் தாழ்விற்கும் அறிகுறியாகப் பறந்து கொண்டிருக்கின்றதாம். கம்பம்உழுத்துப்போனதுகூடத் தெரியாதாம், திடீரென்று கயிறு அறுந்து கம்பத்தோடு கொடி சாய்ந்துவிட்டதாம். இப்பொழுதுதான் தெரிகிறது. ராக்ஷஸ சம்ஹாரத்திற்கு ஆரம்பம் ஆகிவிட்டது என்றும்இராவணனது பாட்டி தாடகை, கொடுமையிலும் வலிமையிலும் ஒருங்கே மூத்து முதிர்ந்தவள். இவளது வீழ்ச்சி ராக்ஷஸ ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சிதான் என்று சாதுக்களின் உள்ளத்தில் உவகை உண்டாகின்றது.

இந்தப்போரை இராமனின் **கன்னிப்போர்** என்கிறான் கவிஞன்.

காகுத்தன் **கன்னிப் போரில்**
கூசி, வாள் அரக்கர்
தங்கள்
குலத்துயிர் குடிக்க
அஞ்சி,
ஆசையால் உழலும்
கூற்றும்
அவை சிறி(து)
அறிந்த(து) அன்றே

தாடகையைத் தொடர்ந்து யமன் வருவானாம். ஏன், பிறருயிரைக் குடிக்க அப்படி அவன் இவள் பின்னால் திரிந்தானாம். உண்மையில் அரக்கரின் உயிரைக் குடிக்கத்தானாம் ஆசை. ஆனால் அவர்களது ஆற்றலுக்குப் பயந்து, கூசிக் கூசிப் பின்தங்கிவிட்டானாம். ஆனால் ஆசை முன்னே தள்ள உழன்றுகொண்டிருந்தானாம் இப்போதுதாடகையின் உயிரை ருசிபார்த்துவிட்டான் இப்போதுஒரே இரத்த வெறியாம் யமனுக்கு, இந்தத் கன்னிப்போரின் பயனாக.

திருமணத் தூதனாக வந்த விஸ்வாமித்திர முனிவன், பின்னால் வில்முறித்துச் சீதையை மணக்கப்போகும் கைத்திறன் கைவண்ணம்) எப்பேர்ப்பட்டது என்பதை இந்தக் கன்னிப்போர் ஒருவாறு காட்டிவிட்டது. தாடகையாவிழுந்தாள். இராவணன் ஜய்க்கொடியல்லவா விழுந்துவிட்டது. இத்தகைய பெருமகிழ்ச்சியில் நாங்கள் இனி இராவணனுக்கு அடிமையில்லை என்றுகூடக்கனவு காண்கிறார்கள் தேவர்கள். தேவராஜ்யத்திற்குச் சுதந்திரம் வந்துவிட்டதாகவே எண்ணுகிறார்களாம். ஆனந்தத்தில் வான வீதியிலிருந்து இறங்கி வருகின்றார்கள். விஸ்வாமித்திரனை நோக்கி வந்து தம் ஆனந்தத்தை முனிவனேடு பங்கிட்டுக்கொள்கின்றனர்.

''யாமும் எம் இருக்கை
பெற்றேம்
உனக்(கு) இடையூறும்
இல்லை
கோமகற்குஇனிநீதெய்வப்
படைக்கலம்
கொடுத்தி'' என்ன
மாமுனிக்கு உரைத்து
பின்னர்
விற்கொண்ட மழைய
ஞன்மேல்
பூமழை பொழிந்து
வாழ்த்தி
விண்ணவர் போயினரே

''எங்கள் சுதந்திரத்திற்கும் இடையூறில்லை, உன் யாகத்திற்கும் இடையூறில்லை என்று முனிவனைப் பார்த்து கூறுகின்றனர். இராமன் சுத்தவீரனென்று தெரிந்துவிட்டபடியால், எப்பேர்ப்பட்ட தெய்வீக அஸ்திரங்களையும் நம்பிக் கொடுக்கலாம், தைரியமாக உபயோகிப்பான். ஆகவே நீ உன் அஸ்திரங்களை எல்லாம் கொடுப்பாயாக'' என்று கூறிச் சென்றனர்; பூமழை பொழிந்து சென்றனர்.

(தொடரும்)

---

இராமாயண இரசிகமணி

**ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்**

(நல்லை ஆதீன கர்த்தர்)

---

ஐந்தாங்குரவர் ஆறுமுகநாவலர்

### சம்பந்தப் பெருமானுக்கும் நாவலர் பெருமானுக்கும் உள்ள ஒற்றுமை

# மூன்று வயதில் நாவலர் கடவுளைக் கூவி அழைத்தார்

ஈழம் நீர்வளம், நிலவளம் செறிந்த பொன்னாடு. வானளாவிய மலைகள், வற்றாத ஆறுகள், அடர்ந்த காடுகள், சமவெளிகள், சிறு சிறு அழகான தீவுகள், கறுவா, கராம்பு, சாதிக்காய் முதலிய நறுமணப் பொருள்கள், நவரத்தினங்கள், யானைகள், யானைத்தந்தங்கள் முதலிய விலையுயர்ந்த பொருள்கள், உணவுக்கு அரிசியும், உடைக்குப் பருத்தியுமுள்ள நாடு. பொன்னிலங்கை யாரைத் தான் கவராது? மரம் பழுத்தால் வௌவாலை அழைப்பதில்லையே.

முதல் முதல் தொகையாக வந்த அந்நியர் அரேபியரென்னும் முகமதியர்கள், மெத்தக் கீழ் நிலையிலிருந்த அரேபிய நாடு முகமதுநபிநாயகத்திற்குப் பின் பல வழிகளிலும் முன்னேறியது. அரேபியர் கப்பல்களில் வந்து, ஈழத்தில் வர்த்தகம் செய்து குடியேறினர். ஈழத்தில் அவர்கள் தங்கள் இஸ்லாமிய மதத்தைப் பலவந்தமாகப் பரப்பியதாகத் தெரியவில்லை. வர்த்தகத்தில் அராபியருக்கும் போர்த்துக்கீசரென்னும் பறங்கியருக்கும் பெரிய போட்டிகளும் போரும் நடந்தது. இலங்கையைபறங்கியர் கைப்பற்றினார்கள். யாழ்ப்பாணத்தில் கடைசியாக அரசாண்ட பரராசசேகரனென்னும் சங்கிலி இராசன் பறங்கியருடன் எதிர்த்துப் போராடினான். பறங்கியர் துவக்கு, பீரங்கிகள் முதலிய ஆயுதபலத்தினால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினார்கள். பறங்கியர் வர்த்தகத்திலும் பார்க்க தங்கள் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதில் கண்ணும் கருத்துமாகவிருந்தனர். கத்தோலிக்க மதம் பரவுவதற்கு முக்கியமான காரணங்கள் மூன்று. 1. பறங்கியருக்கு தங்கள் மதம் தான் உண்மை மதம்-

சைவம் பொய் மதமெனவும் எண்ணம். 2. அந்தக் காலத்து ஈழத்துச் சைவர்களுக்கு சைவ, சைவசித்தாந்த சமயத்தின் அருமை பெருமை தெரியாமை. 3. தாங்க முடியாத வறுமை.

பறங்கியர் அரசாங்கமும் பறங்கிப் பட்டாளமும் தகாத முறைகளில் தங்கள் மதத்தைப் பரப்பினார்கள். சைவக் கோவில்களை இடித்துத் தரைமட்டமாக்கினார்கள். கோவில்களிலுள்ள விக்கிரகங்களைப் பிடுங்கி, குளத்திலும் கிணற்றிலும் கடலிலும் வீசினார்கள். விக்கிரகங்களில் சார்த்தியிருந்த விலையுயர்ந்த ஆபரணங்களைக் கைப்பற்றினார்கள். சைவக் கோவில்களை இடித்த கற்களைக்கொண்டு தங்கள் தேவாலயங்களைக் கட்டினார்கள்.

பறங்கியர், சைவர்களை அவர்களுடைய மதத்தை அனுஷ்டிக்காமல் தடுத்தார்கள். விரதம் அனுஷ்டித்தல், வாழையிலையில் விரதகாலங்களில் அன்னம் புசித்தல் போன்றவை குற்றமாகக் காணப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள்

'முற்பகல் செய்யப் பிற்பகல் விளையும்' என்பதைப்

(5ம் பக்கம் பார்க்க)

---

அறநெறிக் காவலர்

## முதலியார் செ. முத்துத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மனப்புயல்

நட்ட நடுப்பகல்! சித்திரை மாத வெய்யில், மனிதர்களின் மண்டையெல்லாம் வெடிக்க அகோரமாகக் கொளுத்துகிறது. அந்த நேரத்தில் பட்டணத்தில் 'பாசன்' காட்டித்திரியும்மனிதர்களைக்கூடக் காணமுடியவில்லை. அங்கே காணப்பட்ட ஒரிரு மனிதர்கள்கூட

கொள்கைகளை நாம் சார்ந்து தான் வாழவேண்டியிருக்கிறது. அதற்காக நல்ல மனிதர்கள் சிலர் தம்மைக் கவர்ச்சியுள்ளவர்களாக்கிக் கொண்டு உடைத்தூய்மையோடு உள்ளத்தூய்மையும் ஏற்படுத்திவாழ வேண்டுமெனச் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம்சொல்லிச்

கண்ணைப்பற்றித் தெளிவாக அறியாதவன் தன் கண்ணை எதைக்கொண்டு எப்படிப் பார்த்து அறிவது. இதுமுடியும் காரியமா?

அவன் கண்கள் சிவந்திருக்கின்றன. அதிலிருந்து பொலபொல எனக் கண்ணீர் வடிகிறது. அந்த வெய்யிலிலேற்படும் வியர்வை

திபலிக்கின்ற பொழுது காதல் போலத்தெரிகிறது. ஆசை குறையக் காதலும் மறைந்துபோகிறது. கானல் நீர் என்று ஒன்று இல்லாதது போலக் காதலும் இல்லை. என்ன? நான்கொண்ட காதலும் கானல் நீர்தானே? அதுகானல்நீர் அல்ல; கானல் நீரின்அடிப்படையான சூரியவொளி அங்கு இருக்கிறது. சூரியவொளியில்லாமல் கானல் நீர் இல்லை. அன்பு இல்லாமல் மனித வாழ்க்கை எப்படி நடைபெறும். என் காதல் ஆற்றிடை ஓடும் தெளிந்த சுவைநீர். அதைப் பருகும்மனத்தைப் பொறுத்தது அதன் சுவை. தாகத்தில் குடிப்பவன் எந்தத் தண்ணீரையும் குடிப்பான். அவனுக்குத் தாகம் தீர்ந்தால் சரி. ஆனால் உடல் வாழ்வுக்கும் நீர் இன்றியமையாதது என உணர்கின்றவன் சுத்தமான சுவையான நீரையே குடிப்பான். அது அவனுக்கு வாழ்வளிக்கும். அதுபோலத்தான் காதலும். கானல் நீர் எல்லோர் கண்ணுக்கும் தெரிகிறது. நான் கொண்ட காதல் எனக்குத் தெரிகிறது. என் உள்ளத்துக்குத் தெரிகிறது. ஆனால் அது என் அகத்தைவிட்டு என்றும் மறையவில்லை. அதை எப்படிக் கானல் நீர் என்பது.

''அம்மா! என் அன்பு என்னை ஏன் வருத்துகிறது. நான்இனி வாழமாட்டேன், என்னைப் போற்றும் மனிதர்களே! என்நிலை கண்டு சிரியுங்கள், அன்புப் பாசத்தால் படும்பாடுகண்டு அன்பில்லா மனிதர்களே சிரியுங்கள்'' என்றெல்லாம் அந்த ஆசிரியன் புலம்புகிறான் — நடுவீதி! நடுப்பகல்.

இந்த வெய்யிலும் வாழ்க்கைக் கொடுமைகளைத்தாங்கிக்கொண்டு எப்படியோவந்தோம், வாழ்ந்துமுடித்துவிடுவோம் இதிலேவரும்துன்பங்களைநாமேன்பிறருக்குக்காட்டிக்கொள்ள வேண்டுமெனத் தம்துன்பங்களையெல்லாம் அகத்துள் மறைத்துவைத்து வாழ்கின்ற மனிதர்கள் பஸ் கியூவில் நிற்கின்றபொழுது எரியும் வெயிலில்தார்ரோட்டில் ஏற்பட்ட சூட்டைத் தாங்கமுடியாது ''உஸ்ஸ்'' என்று தங்கள்ஆயாசத்தைக் கொட்டித் தங்கள் கால்களை மாற்றி மாற்றி நின்றனர். அந்த ஆசிரியர் இதுவரை நேரமும் பஸ்ஸுக்குக் காத்துக்கொண்டு நின்ற அம்மனிதர்களைப்பற்றிக் கவலைப்படாமல் கியூவில் நில்லாமலே ஏறமுயன்றார். ''ஒழுங்கு முறையை வற்புறுத்துவோர் முறைஇது'' என்றார். அவரை ஓர் ஆசிரியரென்று தெரிந்து கொண்டகொண்டக்டர் ஒரு

கையிலொன்றும் புறவாழ்க்கையிலொன்றுமாகவாழ்ந்து திரியும் ''சான்றோர்'' நடிப்பல்ல அவை. மனிதன் பூரணத்துவமாக வாழவேண்டும். அதில் இருமனம்கலக்கவேண்டும். அந்த இருமனங்களையும்அன்பு பிணைக்கவேண்டும். அந்த அன்பிலேதான் குற்றங்களை மறந்து குணங்களைக்கொள்ளும் மனிதத் தன்மை இருக்கிறது. எனவே அந்த அன்புக்கு இடமாகிய அகவாழ்க்கையை நினைவிலும் மாசுபடாத உள்ளங்களை எடுத்துக் காட்டும் சங்க அகத்துறைக்காவியம் அதிலேஒருபாடல் தலைவன்தலைவியைக் குறியிடத்திற் சந்திக்கிறன். அவர்கள் காதல்ஊராருக்குத்தெரிந்துவிட்டது. அவளோ தன்னுள்ளத்திலுள்ளவற்றைச் சொல்லத் தயங்குகிறாள்; பெண்மை கொண்டவள். தலைவனோ தான் உழைத்துப் பணம் சம்பாதித்தாலொழிய தலைவியின் தாய்தந்தையரிடம் சென்று தனக்குத் தலைவியை மணம் முடித்துத் தரும்படி கேட்க முடியாது. அதுவரையும் பொறுத்திரு என்கிறான். அவளுக்கு அவனைப் பிரிந்து ஒரு கணம்கூட இருக்க முடியவில்லை. காணுமிடமெல்லாம் அவன் தோற்றம். கண்டபின் ஏமாற்றம். நிலை கலங்கும் நிலை. உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும் அவன் நினைவு வந்து நெஞ்சிற் படபடப்பை ஏற்படுத்தி ஒருவித புல்லரிப்பைக் கொடுக்கிறது. அதனால் பைங்கிண்ணத்திற் பாலும் சோறும் ஊட்டியும் உணவு செல்லவில்லை. உறக்கமின்றி வாடுகிறாள். அவள் மெலிவு முதுபெருங்குரவர்கள் அவளைத் தெய்வம் பிடித்திருக்கிறதென்று பேயோட்டும் பூசாரிகளை அழைத்து வருவார்கள் என்றும், அப்படி அழைத்துவரும்போது அவள் கற்பு மாசுபடுமே என்றும்அச்சம். அத்தலைவியினியல்புகளையும் கருத்தைக் கவரும் கண்ணழகையும், உள்ளத்தில் வேதனை ஏற்படுத்தும் செம்பவள உதட்

டினையும், முல்லைப் பல்லழகையும் கூர்விழுந்த மூக்கழகையும், தள தள என மினுமினு எனத் துலங்கும் காந்தள் கைவிரல்களையும் அவர் அழகுபட வர்ணிக்கின்றார். அப்பொழுது ''அரிமயிர் திரள் முன்கை யாயிழை மடமங்கையர்'' என்ற புறவரியை எடுத்ததும் அவர் நினைவின் முன்னே கூப்பிய கரங்கள்; திடுக்குற்றார். அந்தக் கரங்கள் யாருக்குச் சொந்தம்? மாணவரின் முகத்திலோ மகிழ்வுக்கு எல்லையே இல்லை. ஆனால் அந்த ஆசிரியர் மகிழ்ச்சியாகவும் மாண்பாகவும் வர்ணித்தாலும் அவர் முகத்திலே மகிழ்ச்சியினூடே ஒரு வேதனை கோடிடுவதை மாணவர்கள் கவனிக்கவில்லை. அவர்கள் கவனமெல்லாம் கவர்ச்சியில் இருந்தது ஆனால் அந்த ஆசிரியரின் பார்வையோ அவர் வாழ்வின் இலட்சியப் பாதையை நோக்கியது. பாடம் முடிந்ததும் ஒரு பெருமூச்சு வெளிவந்தது. அந்த வேதனைப்பெருமூச்சை யாரறிவார்? கலங்கிய கண்களோடு அவர் அந்த மேடையை விட்டு இறங்கியதைக் கண்ட சில மாணவர்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

சிறிது நேரத்திற்குப் பின்னால் ஒரு சயிக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினார். வாழ்விற்காக ஏங்கிய இதயம் தனக்கு இதம்தரும் அந்தப் புதுமலரை நாடிச் சென்றது. அவர் அவளை ஒரு ஆசைப் பொருளாக அழகுப் பொருளாக நினைக்கவில்லை. ஒரு தெய்வமாகவே நினைத்து அவள் மீது அன்பு கொண்டார். தெய்வமும் பக்தனுக்குத் தன் அருளைக் கொடுத்தது. தூய இதயங்கள் இரண்டும் தம்மை இன்னும் தூய்மைப்படுத்த ஒன்றையொன்று ஈர்த்துக் கொண்டன.

அவளிருக்கும் இடம்நாடிச் சென்றவர் அவள் அந்தக் கதிரையிலிருக்கும் தோற்றத்தைக் கண்டதும் சிறிது நேரம் திகைத்து நின்றார்.

ஏதோ ஒரு புனிதமான ஆலயத்துக்குள் வந்ததுபோன்ற உணர்வு. சில கோவில்களில் வெளவாலும் வேறுபொருட்களும் அசுத்தப்படுத்தி அதன் தூய்மையைக் கெடுத்தாலும் அங்கே வீற்றிருக்கும் தெய்வத்தை நினைக்க அசுத்தங்களை மறந்து நிற்கும் பக்தன் நிலையில் நின்ற ஆசிரியரை, ''என்ன நிற்கிறீர்கள்'' என்ற பால் மணம் மாறாத குழந்தை முகமும் பால் போலும் உள்ளமும் கொண்ட அந்த யுவதி கேட்டதும் தன்னை மறந்து நின்ற ஆசிரியருக்கு அப்பொழுது தான் உணர்வு வந்தது.

அவள் உடுவத்தை உற்றுப் பார்த்தார். பக்தனாக நின்றவர் தலைவனாக மாறிவிட்டார். கருணைபொழியும் கருவண்டுக்கண்கள் எங்கோ அழைத்துச் சென்றன. அவளுடைய துடிக்கும் இதழ்கள் அந்தத் தூயவனை என்னவெல்லாமோ எண்ணி ஏங்கி மயங்கவைத்தன. இடம் மாறினான், நினைவு மாறினான், பேசுவதே என்ன என்று தீர்மானித்துப் பேசும் தன்னியல்பை இழந்துவிட்டான்.

வழமைபோல ஏதோவெல்லாம் பேசத்தொடங்கினார். பாவம்! வகுப்பு மாணவர்களுக்கும் காதலிக்கும் வித்தியாசமே தெரியவில்லை. அந்த ஆசிரியருக்கு உள்ளத்தில் இருக்கும் உணர்வுகளை வெளிப்படையாக எப்படி ஒரு பெண் சொல்வாள். இலக்கியத்தில்வரும் காட்சிகளை சொல்வழிவரும் உணர்வுகளை எடுத்துக்காட்டும் ஆசிரியருக்கு அவள் அங்கம் காட்டும் உணர்வுகளைப் புரிந்துகொள்ள முடியாமற்போய்விட்டது. ''என் கடிதங்களை எரித்துவிட்டாயா? அது என்னை எரித்தது மாதிரியல்லவா? நான் படும் கஷ்டங்கள் உனக்குத் தெரியவில்லை. நிம்மதியாகவா இருக்கிறேன்?'' இவ்வாறெல்லாம் அவர் பேசிய பேச்சில் அவள் உடலோடு கலந்து நிற்கும் அவள் உயிரையும் அதனால் ஏற்படும் சொல்ல முடியாத உணர்வு

களையும் இவ்வளவு தூரம் நுண்மையாக எடுத்துச் சொல்லிய அத்தூயவள் உணர்வுக்கு முன்னால்- அறிவுக்கு முன்னால் பட்டதாரியின் அறிவு மங்கிவிட்டது. சாந்தத்தின் தெளிந்த அறிவின் சின்னமாக விளங்கும் அப்பெண் தன்னைப் புலப்படுத்தினாள் ஆனால் மயக்க நிலையிலிருந்த அந்த ஆசிரியனால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

''எப்படி சுகமா? நான் உன்னிடம் தந்த பொறுப்பை எல்லாம் முடித்துவிட்டாயா?''

''நான் என்ன செய்யிறது, அவர்கள் தந்தாலல்லவா தருவதற்கு......''

''சரி, சரி எப்படி நம் விஷயமிருக்கிறது, வீட்டிலே என்ன சொல்லுகிறார்கள்?''

''நான் என்னத்தைச் சொல்லிறது, உங்களுக்குத் தான்நடப்பதெல்லாவற்றையும் ஒன்றுவிடாமற் சொல்லுகிறேனே.''

மனிதனுக்கு மதிப்பிருந்த காலம் மாறிப் பதவிக்கு மதிப்பு வந்தகாலமிது. அரசாங்கத் தொழில் புரிவோர் உயர்ந்தவர்களாகவும், தன்னறிவோடும் தன்மானத்தோடும் தன்கையை நம்பித் தன் காலில் நின்று வாழுகின்ற உழைப்பாளிக்கே மரியாதையில்லை, மதிப்பில்லை, மாண்புறு மனைவியில்லை. வேடதாரிகள் சொல்லுகிறார்கள் பதவிக்கா மனைவி? பணத்துக்கா மனைவி? என்றது அவர் மனம்.

(4-ம் பக்கம் பார்க்க)

## பூரணம் பொலியும் நன்றே

'கவியரசன்'

நிலைக்குக நேர்மை நீண்டு
நெறியிலே நாட்டைப் பேணும்
கலைக்குரல் ஒலிக்க காதல்
கனிவிலே கண்ணியங்கள்
விலைப்படா வகையில் வெற்றி
விழுதுகள் ஊன்றி உண்மை
புலப்படப் புதிய ஆண்டே
பூத்தனை புனிதம் பொங்க.

சாதிகள் பிரித்துச் சண்டை

## வாழிய நீ!

— இளம்பரணன் —

ஞாலத் தொளி பரப்பும் ஞாயிறாய்
நலம் பெருகக்
கோலக் குமரி யெனும் சௌமியளாள்
வந்திட் டாள்;
பாதச் சிலம் பொலிகள் பரவிப்
புலம் பிடவே
சீலமும் பண்பும் சிறப்பு நற்
புத் தொளியும்
ஏலவே கொண்டு எழிலுடனே
வந்திட் டாள்

காலங் கரைந் தொழுகும்; கரைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்ட நடுப்பகல்! சித்திரை மாத வெய்யில், மனிதர்களின் மண்டையெல்லாம் வெடிக்க அகோரமாகக் கொளுத்துகிறது. அந்த நேரத்தில் பட்டணத்தில் 'பாசன்' காட்டித்திரியும்மனிதர்களைக்கூடக் காணமுடியவில்லை. அங்கே காணப்பட்ட ஓரிரு மனிதர்கள்கூட வீதிகளூற் சென்றுகொண்டிருந்த வாகனங்களோடு போட்டிபோட்டு நடந்து கொண்டிருந்தனர். ஆனால் அந்த இடத்தில் ஒரு மனிதன் மட்டும் பற்றற்ற துறவி போல மெதுவாக நடந்து செல்கிறான். வகுப்பறைகளிலெல்லாம் புகைபிடிப்பதால் வரும்தீமைகளைமாணவர்கள் மத்தியில் தர்க்கவாதங்களோடும், விஞ்ஞானக்கண்ணோடும் பேசி, புகைபிடிக்கும மாணவர்களையெல்லாம் தன் இனிமை நிறைபேச்சுக்களால் திருத்தி அவர்களைக் கவர்ந்த அவன் கையில் சிகரெட் புகைக்கிறது. எதிர்ப்பாலாரைக் கவர்வதற்காக அல்ல அழகான ஆடைகள் அணிவது. ஒவ்வொருவனும் சமுதாயத்தில் வாழும்பொழுது ஒவ்வொருவரையும் கவர்ந்தால்தான் அவர்களோடு மகிழ்ச்சியாக வாழ முடியும். அகவுடையாகிய நற்பண்புகளைப் பார்க்கமுடியாது புற உடைகளைக் கண்டு, அதில் நாட்டங் கொண்டு, அதனாலேயே மனிதர்களை உயர்வாக மதிக்கும் சமுதாயம் இது இந்தச் சமுதாயத்தில் மனிதன் வாழவேண்டுமானால் நம் வழிக்கு அவர்களைத் திருப்புவதற்கு முன், நல்லஉண்மைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்வரை அவர்கள் கொள்கைகளை நாம் சார்ந்துதான் வாழவேண்டியிருக்கிறது. அதற்காக நல்ல மனிதர்கள் சிலர் தம்மைக் கவர்ச்சியுள்ளவர்களாக்கிக் கொண்டு உடைத்தூய்மையோடு உள்ளத்தூய்மையும் ஏற்படுத்திவாழ வேண்டுமெனச் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம்சொல்லிச் சொல்லி வாழ்ந்த அந்த இலட்சியபுருஷன் - அவன் முகத்திற்கு அலங்கோலமாக இருந்ததாடியை வழிக்காமலும்' அவனது அழகு கண்ணைப்பற்றித் தெளிவாக அறியாதவன் தன் கண்ணை எதைக்கொண்டு எப்படிப் பார்த்து அறிவது. இதுமுடியும் காரியமா?

அவன் கண்கள் சிவந்திருக்கின்றன. அதிலிருந்து பொலபொல எனக் கண்ணீர் வடிகிறது. அந்த வெய்யிலிலேற்படும் வியர்வை போல் அவன் நிமிர்ந்து பார்க்கிறான், கண்ணைக்கசக்குகிறான். தள்ளாடுகிறான். நிலையில்லாத மனிதன் நிலையில்லாமல் ஆகிறான்.

## — மயிலை சிவ. சண்முகதாசன் —

மிகு முடியை வாரிவிடாமலும் எண்ணெயின்றி பரட்டையாகப் பறக்க, புழுதி படிந்த ஆடையோடு-வெண்ணிற ஆடையானபடியால் நல்லவர்கள் செய்த தவறு எல்லார்க்கும் தெரிவது போல- ஆடையின் அழுக்கு மக்களைத் தன்பால் ஈர்க்க மிகவும் மெதுவாக நடந்து செல்கிறான். உலகத்தை மறந்தநிலை! தன்னை நினைந்தே உலகத்தை மறந்தானா? அல்லது உலகச் செயல்களை எல்லாம் உணர்ந்து அதிலிருந்து வரும் துன்பங்களைத் தாங்கமுடியாத இதயத்தில் ஏற்பட்ட மயக்க நிலையில் நடந்தானா? அல்லது வெய்யிலின் கொழுந்துவிட்டெரியும் கதிரைவிட அவன் இதயத்திலேற்பட்டவேதனை வெப்பம் மிகுந்து சூரியனின் வெம்மையையே தன்மயமாக்கியதா? ஏன் இந்தத் தனிமை நிலை? ஏன் இந்த மோன நிலை? அவனை அவனே அறிவான், சிச்சி... பொய்! பிறர்

அவன் செல்லும் வீதியோ பெருவீதி, அந்த வீதிக்கு நேரே பார்க்க கண்ணுக்கெட்டிய தூரம்வரை அதன் மேலே கானல் நீர். ஒரு கணம் உற்று பார்க்கிறான், விம்மி விம்மி அழுகிறான், எங்குமே கானல்நீர், அவனே கானல் நீர் அவன் வாழ்க்கையில் வரும் சிறு நிலைகளையும் கானல் நீராக்குகிறான் வாழ்க்கையில் வரும் காதலும் கானல்நீர் தானா? சூரியனின் கதிர்கள் ஓர் இடத்திற் பட்டுப்பிரதிபலிக்கும்பொழுதுகானல்நீர் உருவாகிறது. வெய்யில்அதிகமாகிஅதிகமாகிவர கானல் நீரும் பார்ப்போர் கண்ணுக்குமிகவும்தெளிவாகத்தெரிகிறது. சூரிய ஒளி குறையக் குறைய கானல் நீரும் கண்ணுக்குத்தெரியாதுமறைந்து போகிறது. காதலும் அது போலத்தான். மனிதனிடத்து ஏற்படும் ஆசை அதைப் பூர்த்திசெய்யக் கூடிய இடத்தில்பட்டுப்பிர

மாறி மாறி நின்றனர். அந்த ஆசிரியர் இதுவரை நேரமும் பஸ்ஸுக்குக் காத்துக்கொண்டு நின்ற அம்மனிதர்களைப்பற்றிக் கவலைப்படாமல் கியூவில் நில்லாமலே ஏறமுயன்றார். "ஒழுங்கு முறையை வற்புறுத்துவோர் முறைஇது" என்றார். அவரை ஓர் ஆசிரியரென்றுதெரிந்து கொண்டகொண்டக்டர் ஒருவர். "அவருக்குச்சுகமில்லைப் போல அவரை மேலேவிடு" இதுவரை நன்கு அறிந்து கொண்ட பரிசோதகரின் குரல். இதையெல்லாம் கேட்டும் அந்த ஆசிரியர் முகத்தில் எதுவித மாற்றமும்காணப்படவில்லை. அவர்தான் தன்னைமறந்தநிலையில் இருக்கிறாரே. மேலே ஏறினார். 'எவ்விடத்துக்கு......? கொண்டக்டர் கேட்டார். எங்கையாவது போடு" இது அந்த ஆசிரியரின் குரல். கொண்டக்டருக்கு ஒருபுறம் கோபமாக இருந்தாலும் அவர்நிலைகண்டு அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. கீரிமலைக்கு டிக்கட் போட்டுக் கொடுத்தார்கொண்டக்டர். ஒரு ரூபாய் கொடுத்த ஆசியர் மிகுதி வாங்கவில்லை. கொண்டக்டர் மிகுதியை நீட்டியதையும் அவர் கவனிக்கவில்லை அவர் கண்கள் தனக்கு முன் சீட்டில் இருந்த அந்த இளம் சோடிகளைக் கண்கொட்டாமற் பார்த்துக் கொண்டிருந்தன.

## 2

முதல் நடந்த பாடம் முடிந்துமறுபாடம் தொடங்குவதற்கு அடையாளமாக மணியடித்ததும் புன்சிரிப்புத்தவழ நெற்றியில் சிந்தனைக்கோடுகள் வெளிக்காட்ட நிமிர்ந்தநடையோடு வகுப்பிற்குள் காலடியெடுத்துவைத்தார் ஆசிரியர். மாணவச்சிட்டுகளின் அகம் மலர்கின்றது. வாழ்க்கைக்குதவாத சில செய்திகளை மனத்திற் புகுத்தி அந்தப் புகுத்தல் முறைதான் கல்விமுறையென்று நினைந்துபுகுத்திய செய்திகளைக் கிரகிக்க முடியாமல் அவர்தம் மனம் சோம்பிக்கிடந்தது. படிப்பு என்று அதைக்கொண்டு போலிமனிதர்கள் நடிப்பது என்ன, உண்மை எங்கே உறங்கிக்கிடக்கிறது. அதற்கும் இன்றைய சமுதாயத்திற்கும் எந்த அளவுக்குத் தொடர்பிருக்கிறது. உண்மையை அறிய இந்தச் சமுதாயம் எப்படி அமைய வேண்டும். அவன் போதிக்கும் பாடம் அந்தச் சமுதாயத்தை எப்படி உருவாக்கித்தர உதவுகிறது என மாணவர் மனதிற் பதியச் சொல்லும் நவ சமுதாயச் சிற்பியாக அவர்கள் கண்களில் தோன்றுகிறார் அவர். அன்று நடக்கவேண்டியது சங்க இலக்கியம். அகவாழ்க்


# தம்பி அன் கோ.,

வண்ணார்பண்ணை :-: யாழ்ப்பாணம்

ரூ. 1000\- தொடக்கம் ரூ. 10000 - வரை

தவணை வைப்புக்கு (Call Deposits)
கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

7 நாள் அறிவித்தலில் எடுப்பதற்கு வருடம் 7 சத விதம்
30 நாள் அறிவித்தலில் எடுப்பதற்கு வருடம் 8 சத வீதம்

இதே மாதிரி 10 விளம்பரம் தருபவர்க்கு ஒரு சுவீப் ரிக்கற்
இனமாகக் கொடுக்கப்படும்.


நிலைக்குக நேர்மை நீண்டு
நெறியிலே நாட்டைப் பேணும்
கலைக்குரல் ஒலிக்க காதல்
கனிவிலே கண்ணியங்கள்
விலைப்படா வகையில் வெற்றி
விழுதுகள் ஊன்றி உண்மை
புலப்படப் புதிய ஆண்டே
பூத்தனை புனிதம் பொங்க.

சாதிகள் பிரித்துச் சண்டை
தரும்துயர் அழிந்தே ஓடி
நீதிகள் நிலையதாக
நித்தமும் சத்தியத்தை
போதனை செய்வோர் புத்திப்
பொலிவினால் பூரணத்தின்
காதலில் கடமை காக்க
கனிந்து நீ வருகை தந்தாய்.

அன்புதான் அடிவேராகி
அறமெலாம் அலர்ந்தே நாட்டில்
இன்பமே இறுக்கமானல்
எழில் தரும் வளங்கள் ஓங்க
மன்பதை மலர்ச்சி காணும்
மாண்புடன் இறைவனாரின்
பொன்பதம் போற்றும் பக்திப்
பூரணம் பொலியும் நன்றே.

## வாழ்வுதரப் பூத்தாள்

### - கருணையோகன் -

காலரத மோடும்நெடும் பாதை-அந்த
நீளநெடும் பாதையொரு கோதை-அவள்
கோலமுகங் கண்டு இந்த
ஞாலத்தவர் நெஞ்சமெல்லாம்
துள்ளும்-இன்பங்
கொள்ளும்!

செந்தமிழர் பண்டுகண்ட சித்திரை-இவள்;
வந்துபோகு மாண்டுக்கெலாம் முத்திரை-நிதம்
வந்துவந்து ஏகுமிவள்
தந்துதந்து போகுமொரு
தத்துவம்-பெரும்
வித்துவம்!

கட்டழகுப் பெண்ணிவளின் ஆடை-நெஞ்சைத்
தொட்டிழுக்கும் பச்சைவண்ணக்கூடை;-எமை
மயக்குமிந்தத் தோற்றமெலாம்
இயற்கையன்னை யாலேவரும்
மாட்சி-அவள்
ஆட்சி!

மாவிருந்து பாவிசைக்கும் குயிலோ-என்றுந்
தேமலர் சொரியும்எழிற் பொழிலோ!-இங்கு
மாமனையெ லாம்குலுங்கும
காமனின்பு கழ்இசைத்துப்
பாடும்-துயர்
ஓடும்!

பன்னிரண்டு புத்திரரில் மூத்தாள்-எமக்கு
நன்னெறியாம் வாழ்வுதரப் பூத்தாள்;-வரும்
கண்மணியாம் மக்களினல்
மண்ணிலுள வர்க்குஎன்றும்
நன்மை-இது
உண்மை!

## வந்தாய் வாழி

### —கரவை. கி. குலசேகரன்—

பொய், கொலை, களவு ஓய
பொலிந்திடச் செல்வம் எங்கும்
தெய்வீக மணம் கமழ,
தேன்மழை பொழிய, செந்நெல்
உய்திட, உழவர் மாண்பு
உயர்ந்திட, உவகை நாங்கள்
எய்திட எழிற் புத்தாண்டே
ஏற்றமாய் வந்தாய் வாழி!

ஞாலத் தொளி பரப்பும் ஞாயிறாய்
நலம் பெருகக்
கோலக் குமரி யெனும் சௌமியளாள்
வந்திட் டாள்;
பாதச் சிலம் பொலிகள் பரவிப்
புலம் பிடவே
சீலமும் பண்பும் சிறப்பு நற்
புத் தொளியும்
ஏலவே கொண்டு எழிலுடனே
வந்திட் டாள்

காலங் கரைந் தொழுகும்; கரைந்து
கரைந் தங்கு
நாளும் பலவாய் நகர்ந் திடவே
ஓர் ஆண்டு
சென்று மறைந் திட்டாள்; கீலகியாள்
அவள் நிலையில்
நின்று சுகம் அருள நினைந்து
வரு வாளாய்
நங்கை வந் திட்டாள் நாம்கூடி
வாழ்த் திடவே!

பஞ்சம் பசி அகலப் பாட்டாளி
துயர் களைய
நெஞ்சி லது வஞ்ச நினைவகல
ஒளி பெருக
நன்செய் நிலந் திருத்தி நாடு
நனி சிறக்க
ஒன்றாய் ஒருகுலமாய் ஒற்று மையாய்
வாழ்ந் திடவே
நன்றே வந்த நற்புத் தாண்டே
வாழிய நீ!

## சித்திரைப் பெண்மலர்ந்தாள்!

### — அல்வை. த. சுந்தரன் —

செந்தமி ழிற்சுவைச் சிந்துக ளார்த்திடச்
சித்திரைப் பெண்மலர்ந்தாள்!-எழில்
இத்தரைக் கண்மலர்ந்தாள்-புவி
வந்தனை செய்துதேன் சிந்துங் கவிசெய
வண்டமிழ்ப் பண்திறந்தாள்!-கொடும்
வன்துயர்ப் பெண்தளர்ந்தாள்!

தெள்ளு தமிழ்தரு வள்ளு வனின்குறள்
தீட்டும் அருள்வழியில்-சுவை
கூட்டும் நெறிவழியில்-புவி
செல்லும்! துயர்அறத் துள்ளும்! சுகம்பெறச்
சித்திரப் பாவைவந்தாள்!-இன்ப
நித்திலப் பூவை வந்தாள்!

கன்னல், கதிர்மணிச் செந்நெல், கனிகளும்
கையினிற் கொண்டுவந்தாள்!-மிடி
பொய்யெனக் கண்டு நின்றாள்!-இனி
இன்னல், இடர், துயர் இல்லை! இன்பம்என
இன்தமிழ்ப் பெண்மலர்ந்தாள்!-சுவை
இன்தமிழ்ப் பண்ணளந்தாள்!

## மகிழ்ந்தன வையத்து உயிர்கள்

### -பசுவூர் சு. மகாலிங்கசிவம்-

தாரணிந்த குழன்மாதர் வடித்த கோலம்
சாலையொடு முன்றில்கள் எல்லாந் தோன்றத்
தோரணங்கள் தொங்கவிட்டு வாழை நாட்டிச்
சோலையெனச் செங்கரும்புத் தூண்கள் கட்டிப்
பூரணநற் கும்பங்கள் முன்றில் தோறும்
பொலிவாக வைத்துப்பொற் பானை தன்னை
ஆரம்செய் தடுப்பினிலே ஏற்றி வைத்தே
அரியசுவைப் பொங்கலிட்டார் தமிழர் எல்லாம்!

உலகத்து நாடெல்லாம் பகையொழிந்து
உவப்புடனே அரசோச்ச நீதி ஓங்க
நலனுற்று நாடெங்கும் மாரிபெய்ய
நானிலம் எங்கும்நல் லறங்கள் வாழ
நிலவுக்கு நடைபோடும் மனிதன் ஆக்கம்
நிறைவேற, நவமான பொருள்கள்காண
மலர்ந்தது புத்தாண்டு வனப்பினோடு
மகிழ்ந்தன வையத்து உயிர்கள் எல்லாம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

''அப்ப என்னதான் முடிவு......? நான் இப்படியே இருக்க வேண்டியதுதானு?''

''என்னை என்ன செய்யச் சொல்லிறியள். எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கிறது'- பெற்றோர் பாசத்திற்கும் பெறுவோன் பற்றிற்குமிடையே அவள். அந்நிலையில அமைதி எங்கே? பைத்தியம் பிடியாமல் என்னதான் செய்யும்.

''உன் நிலையை நான் உணருகிறேன். உன்னை மறக்க முயன்ருலும் என்னுல் மறக்க முடியவில்லையே.''

''இப்படி எத்தனை பேரை நான் பார்த்திருக்கிறேன். முதலில் இப்படித்தான் சொல்வார்கள். பிறகு...அதிகம் சீதனத்தோடு பெண் வந்தால் மாறுவார்கள்.''

என்ன! நீயா சொல்கிருய்? உயிருக்குயிராக விளங்கும் நீயா சொல்கிருய்? ஐயோ! எனக்கு எங்குமே நிம்மதி கிடையாதா? உங்களுக்கென்ன செல்லப்பிள்ளை என்று சொன்ன என்னை உன்னுல்தான் செல்லப்பிள்ளையாக்க முடியும் என்று சொன்னேனே! பல இலட்சங்களும் என் இதயத்துச் செல்விக்கு ஈடாகாதென்று அவ்விலட்சங்களையும் புறக்கணித்து இருந்த எனக்கா இந்த நிலை? அவர் உள்ளத்தில் புயல் வீசத் தொடங்கிவிட்டது. எதைச் சொல்கிருேம், யாரைச் சொல்கிருேம் என்று உணராமல் எதையும் தாங்கும் மாசற்ற பெண்கள் உள்ளத்தாலும் தாங்க முடியாத சொல்லைச் சொல்லிவிட்டார். சேற்றில் மலர்ந்த செந்தாமரை கண்ணுக்கு அழகையும் குளிர்ச்சியையும் மனதுக்கு இனிமையையும் தருகிறது. ஆனுல் அந்த மலரைப் பிடுங்கிக் கசக்கி நுண்நுகர்வோடு முகர்ந்து பார்த்தால் அதில் சேற்று மணமும் கலந்திருப்பதை நாம் அறியலாம். அதுபோலத்தான் சில குடும்பத்திற் பிறந்த மனிதர்கள் தம் சூழலாலும் படிப்பினுற் பெற்ற அறிவினுலும் உலகம் தரும் அனுபவங்களாலும் அழகுபடுத்தித் தன்னைச் சான்ருேணுக்கிக் கொண்டாலும் அவன் குடும்பபாசம் துன்பத்தில் அவனை அறியாமலே வெளிவந்துவிடுகிறது. இதற்கு ஆசிரியன்மட்டும் விதிவிலக்கா, என்ன. புயல் வீசத் தொடங்கினுல் அது நல்லது கெட்டது என்று பாராமல் எல்லாவற்றையும் அழித்துவிட்டுத்தானே தன்

அவள் அப்பெரும் தவறை மறப்பாளா, மன்னிப்பாளா? புயல் உடுவாகியது.

வாழ்க்கையே மாயம். பேசும் வார்த்தைகளோ மோசம். அவர்கள் செயல்களோ மனிதர்களை நாசம் செய்கிறது. என்ன உலகம் இது. அறிவு பெற்றதன் பயனு? தன்னை நேரத்துக்கு நேரம் மாற்றிக்கொள்ளும் குணம்படைத்த மனிதர்களிடையேஎப்படி நிம்மதியோடு வாழ்வது. எங்கே நிம்மதி தேடுவது? அன்று மனிதன் நினைத்தால்-அன்போடு வாழ்ந்தால் நிம்மதியாக வாழலாம், என்றவன் இன்று நிம்மதியைத் தேடுகிருன்- இல்லாத ஒன்றை இருப்பதாக எண்ணி நிம்மதி இல்லை என்கிருன். மயக்கநிலை! மயக்கத்தில் தெளிவில்லை. நிம்மதியைத் தேட மரணத்தைநாடுகிருர். உள்ளத்திலே வாழ்வுக்கும் சாவுக்கும் இடையேபோராட்டம். ''நான் இன்னும் ஏன் சாகாமல் இருக்கிறேன்.'' தற்கொலை செய்தால்...என்றது ஒரு மனம். ''இல்லை, அன்பின் மீது வைத்த பற்று அவனை வீரனுக்குகிறது.''

''பாவம்! ஆசிரியரே! துன்பத்தைத் தாங்க முடியாது சாவதா வீரம்''. ''இல்லை, சாகப்பயந்து கொண்டு அன்புக்காக இறப்பவனைப் பார்த்தா கோழை என்பது? உண்மையாகவா துன்பத்தை மறக்கிருேம்? மறக்கத்தான் முடியுமா? இல்லை அந்தத் துன்பத்தைத் தாங்க முடியாது அணுவணுவாகச் சாகிருேமே? இந்தவாழ்வை இறக்காமல் ஏற்று அணுவணுவாகச் செத்து மடியச் சொல்கிருயா? மற்றவர்கள் என் நிலை கண்டு சிரிக்கவா எனக்கு வழி சொல்கிருய். தூ ... இதுவு மொரு வாழ்வா?''

''சரியப்பா, நீஇறந்துவிடுவதானுல் உன் அன்பைமற்றவர்கள் புரிந்துகொண்டுவிடுவார்களா?''

''அதைப்பற்றிக் கவலையில்லை. என்னுல் அவள் அன்பை இழந்து வாழமுடியவில்லை, அவ்வளவுதான்.''

''சரி. நீ தற்கொலை செய்வதனுல் அவளைப் பற்றி ஊரார் பேசும் பேச்சுக்கு யார் பொறுப்பு. இதுவா அவள் மீது நீ கொண்ட அன்பின் இலட்சணம்?''

''தயவு செய்து கொஞ்சம் ஒய்வுதா. நான் அணுவணுவாகச் சாகிறேன். என் நிலை கண்டு அவள்சந்தோஷப்படுவாளானுல் அதையும் ஏற்


ஒரு மனிதன் பெற்ற அன்பு நீங்கிப்போகும்பொழுது அதற்காக ஏங்கும் மனக் குமுறலை எந்தநூல்களாலும் மாற்றமுடியாது. அத்தகைய உரம் பெற்றது தூய அன்பின் சக்தி. ''விதிபோல் நடக்கும். மனிதா வீண் கவலைஏன்? கவலையைமறந்து செயல்புரிவாயாக''. என்ற வாக்கியத்தைக் கண்டதும் அவரின் மனம் குமுறியது. விதியாம் விதி, அது எங்கே இருக்கிறது. அது திருடர்கள், புரட்டர்கள் வாயிலே இருக்கிறது. சந்தர்ப்பத்திற்கேற்ப மாறுபவர்களும் தங்கள் உண்மை நிலையை மறைப்பவர்களும், திரும்பத் திரும்பத்தவறு செய்பவர்களும் தங்களின் இழிதன்மைகளை மறைத்துக்காப்பதற்கு ஏற்படுத்திய போர்வையே விதி. இதை நாமும் நம்ப வேண்டுமா. ஏமாற்றுக்காரர்களுக்கு விதியென்ற பெயரால் ஆதரவு கொடுக்க வேண்டுமா. விதியென்று சொல்லி என்னையே நான் ஏமாற்றிக்கொள்ள விரும்பவில்லை. நான் ஒருதூயவளைத் தவருகப் பேசியதுகுற்றம். மாபெரும் தவறு. உலகத்தில் நடைபெறும் தவறுகளில் பெரும் தவறு, பெண்மையை மாசு படுத்துவது. அத்தவறைத்திருத்த அவளிடம் மன்னிப்புக் கேட்பதே முறை. அது மட்டுமல்ல அத்தூயவளை மாசுபடப்பேசிய அவ்வெள்ளிக் கிழமையில் இனிமேலும் அத்தவறுகள் ஏற்படாமல் காப்பாற்றுவதற்காக உண்ணுவிரதம் இருப்பதென்றுதீர்மானித்து மன்னிப்புக்கடிதம் எழுதினுர்.

இருநாட்கள் சென்றன. பதில் இலலை. பல நாட்கள் சென்றன, பதிலில்லை. மன்னிப்பா அதுகிடைக்கவில்லை. அவர் உள்ளத்திலேவேதனை. அவரின் கண்ணீரைக்கண்டு தலையணையும் புலம்பியது. ஆனுல் அவள்இவற்றை அறிவாளா? தன் நிலைமாற்றத்துக்கு இச்சொல்லை ஒருசான்ருக எடுத்துக் கொள்வாளா?

அவர்அவள்மீது கொண்ட தூய அன்பு அவள் தூயவள். நல்லவர் உள்ளம் குமுறத் தொடங்கினுல் அது அடங்குவதற்கு நாளாகும். ஆண்களைப்போல அடிக்கொரு நிலை மாற்றம் கொள்பவளல்ல, என்று எண்ணியது. அவரால் எதையுமே தீர்மானம் செய்ய முடியவில்லை படித்தவரல்லவா? பலதையும் எண்ணிக்கலங்கினுர். அவரது அறை இருட்டைக்கண்டு பல நாளாயின. அவரது உள்ளத்தில்வேதனை நிரம்பியிருப்பது போல அவ

# இறைபக்தியற்ற வாழ்வே இன்றைய முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணம்

## புத்தாண்டிலே புதிய பிரதிக்னை செய்வோம்



முந்திய கட்டுரையில் இஸ்லாமிய மாதங்களுள் முஹர்ரம் தலையாய காரணங்களும், இப்புது வருடத்தில் நாம் ஆற்ற வேண்டியவைகளும், சூழலிலே திருந்த வேண்டியவைகளும் பற்றிக் கூறினேம். இக்கட்டுரையிலே அதன் தொடர்ச்சியாக நமது வீழ்ச்சிக்குரிய காரணங்கள் சிலவற்றைக் காண்போம்.

முஸ்லிம்களின் முன்னேரான (தோழர்) சகாபஸ் பெருமக்களின் வழித்தோன்றல்களே இன்றைய முஸ்லிம்களாவர். சகாபஸ் பெருமக்களின் (தோழர்களின்) அடிச்சுவட்டிலே தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இல்லறத்தை நல்லறமாக்க வேண்டியவர்கள். அப்படியாயின் அன்றைய சகாபஸ் பெருமக்களான அபூபக்கர், (றழி) உமர், (றழி) உதுமான், (றழி அலி (றழி) அன்ஹும் ஆகியவர்களின் காலடியிற் பெரும் பாலான நாடுகள் வந்து சேர்ந்தன. நபிபெருமானரின் போதனைக்கு முன், அராபியாவும் அதனைச்சூழ்ந்துள்ள தேசங்களும் அநாச்சாரங்களிலும் மௌட்டீகக் கொள்கைகளிலும் தாண்டவமாடித் தத்தம் மனவிச்சைப் போக்கிலே மாக்களாக வாழ்ந்து வீழ்ந்தனர். ஓர் உரொட்டிக்காக உயிரை மாய்த்துக் கொள்ளும் அளவுக்கு அந்த அரபிகளின்அறிவு தொழிற்பட்டதெனின் அவர்களின் வாழ்க்கை முறைகளை நாம் உணர்ந்து கொள்ள முடியும். இன்று சரித்திரம் கற்கும் மாணவர்கள் நன்குணர்ந்து நபி பெருமானுர்



— எம. எச். எம். அப்துற்றஸ்ஸாக் —

அதிபர், வண்ணை அரசினர் முஸ்லிம் வித்தியாலயம்

(ஸல்) அவர்களின் மான்மியத்தைக் கற்பனை செய்து வியக்கின்றனர். அதே சகாபஸ் பெருமக்கள் மத்திய தரைக்கடலைச் சூழ்ந்துள்ள நாடுகளை ஆட்சி செய்ததற்கும், அதன் பின்னர் வந்த மொகலாய ஆட்சியாளர்களான அக்பர் ஷாஜஹான் ஹுமாயூன் அவுரங்கசீப் முதலியவர்கள் இந்தியாவை ஆண்டதற்கும் ஏதுவாக இருந்த சக்தியாது, உளப்பலம் யாதுஎன்பதைச் சிறப்பாக முஸ்லிம்பெருமக்களும் பொதுவாகமனிதவர்க்கமும் உணரக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

அன்னவர்கள் இறைஆணையின்றி இவ்வுலகில் எதுவும் அசையாது; உலகிலுள்ள அத்தனை சத்திகளும் ஒன்றுசேர்ந்து விஞ்ஞானத்தின் அடிப்படையிலாயினும் சரியேஒரு அணுவைத்தானும் இறைவனின் நாட்டமின்றி அசைக்க முடியாததென்றஉறுதியான நம்பிக்கையில் வாழ்ந்து வந்தார்கள். தமது நாளாந்த வாழ்க்கையில் இருபத்து நான்கு மணி நேரத்தையும் இறைசிந்தையுடன் தொடர்புறுத்தி வாழ்ந்தனர். தொழில் செய்யினும் சரியே, உணவு, உடை, மனைவி, மக்கள், ஆட்சி முதலானவற்றிலும் சரியே இறைநம்பிக்கையுடனே அவ்விறைவன் கூறிய வேதக்கட்டளைக்கிணங்க அணுப்பிரமாணமும் மாறுபடாது வாழ்ந்தனர். தமக்காக எதையும் தேடிக்கொள்ளாது பிறருக்காகவே அத் தேட்டங்களைப் பகிர்ந்தளித்து வாழ்ந்தனர்.

அதன் காரணமாகவே அன்றைய சமுதாயம் அன்னவர்களைப்பின்பற்றத்தயாராகியது. உடனடித் தூதுவர்களை அனுப்பித் தங்களையும் அந் நல்லாட்சியிலும் நல்வாழ்க்கையிலும் சேர்த்துக் கொள்ளும்படி விநயமாக வேண்டுமளவிற்கு முன்னைய முஸ்லிம்கள் தங்கள் நடையுடை பாவனைகளிலும் சிந்தை, சொல், செயல்களிலும் நடந்துவகுத்துக்கொண்டனர்.


உமர் கத்தாப் (றழி) அவர்களின் ஆட்சிக்காலம் (கி.பி. 633—643) மனித சமூகம் மிகவும் சிறப்புடன் இஸ்லாத்தின் கொள்கைகள் அனுட்டிக்கப்பட்டு வந்த காலம் அது. பாலிலே தண்ணீர் கலப்பது தண்டனைக்குரியது என்று உமர் கத்தாப் (றழி) அவர்கள் பிரகடனம் விடுக்கின்றனர். ஒரு குடிசையிலே தாயும் மகளும் உளர். அவர்கள் பால் விற்றுச் சீவனம் செய்பவர்கள்; அன்று ஒரு பிற்பகல், மகளும்தாயும் பால் கறக்கின்றனர். முடிவில் ஒரு பாத்திரத்திலே தண்ணீர் கொண்டு வரும்படி மகளிடம் தாய் கூறுகிருள். ''தாயே எதற்காகத் தண்ணீர்?'' 'இது மகளின் கேள்வி. இது என்ன கேள்வி மகளே! இதோ இந்தப் பாலில் நீரையுங் கலந்தாற்கொஞ்சம் இலாபங்கூடப் பெறுவோம்'

(5-ம் பக்கம் பார்க்க)

மேகலா தயாரித்து தரும்




## நம்நாட்டுக் கலைஞர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைச் செல்விகள்

### ஸ்ரீகாந்தம் சகோதரிகள்

பார்த்தவர்கள் எல்லா டன் ஒட்டிக்கொண்டுவிட்

யாழ்ப்பாணத்து இசைக் கலைஞர் வானெலியில் பாடுகிருர்!

சான்றோருக்குக் கொண்டாலும் அவன் குடும்பபாசம் துன்பத்தில் அவனை அறியாமலே வெளிவந்துவிடுகிறது. இதற்கு ஆசிரியன்மட்டும் விதிவிலக்கா, என்ன. புயல் வீசத் தொடங்கினால் அது நல்லது கெட்டது என்று பாராமல் எல்லாவற்றையும் அழித்துவிட்டுத்தானே தன் வேகத்தை அடக்கிக்கொள்கிறது.

அவள் முகம் கருமையானது; இந்த வார்த்தையைக் கேட்டதும் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டியது. அந்தத் தெய்வத்தின் நெஞ்சம் புண்பட்டது. அடபாவி! பால் போலும் நெஞ்சில் நஞ்சைப்புகுத்திவிட்டாயே! உன் இதயக் கோவிலில் வைத்துப்பூசித்த தெய்வத்தின் மகிமையைக் கெடுத்துவிட்டாயே! என்ன வார்த்தை சொன்னாய்? யாரைப் பார்த்துச்சொன்னாய்? உன் தெய்வமென்றெல்லாம் சொல்வாயே தெய்வம்மாசுபடுத்தப்பட்டால் கோயிலும் பாழாகிவிடுமே. உன் இதயக்கோயில் மாசுபட்டுவிட்டதே. முட்டாள் நீ. படித்துப் பட்டம் பெற்ற தொடுகேடா. அந்தப் பத்தரை மாற்றுத் தங்கத்தின் விழிநீர் சொரிந்ததைக் கண்டு திடுக்குற்ற அவர் உள்ளத்தில் இதுவரையும் அடங்கிக்கிடந்த மனச்சாட்சி உறுத்தத்தொடங்கிவிட்டது, அவரை அவரே தாக்கத்தொடங்கிவிட்டார். போராட்டத்தின் இருப்பிடமாகிவிட்டது அவர்இதயம். நல்லவர்இதயம் தன்தவறை உணரத்தொடங்கிவிட்டால் அவர்கள் நிம்மதியாக வாழ்வதில்லை. பாவம்! அவருக்கு அவரே பகை ஆனார். இனி யாருமே அவருக்கு நிம்மதி கொடுக்க முடியாதா.

அவர் அந்த ஆலயத்திலிருக்கும் தெய்வத்திடம் தன் உயிரை விட்டுவெறும் உடலோடு புறப்பட்டார்.

சஞ்சலமுள்ள மனத்துக்கு ஒரு வார்த்தை கிடைத்தால் போதும், எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி ஏங்கும். இல்லாத பொருளையெல்லாம் அவ்வார்த்தையிலே காணும். இதயத்தில் அன்பிருந்தால் அந்த அன்புக்குரியவர் செய்யும் குறைகளை மன்னித்துமறந்துவிடும் என்பார்கள். அப்படியான அன்பிதயத்தைப் பெற்ற

வதனால் அவளைப் பற்றி ஊரார் பேசும் பேச்சுக்கு யார் பொறுப்பு. இதுவா அவள் மீது நீ கொண்ட அன்பின் இலட்சணம்?''

''தயவு செய்து கொஞ்சம் ஓய்வுதா. நான் அணுவணுவாகச் சாகிறேன். என் நிலை கண்டு அவள்சந்தோஷப்படுவாளானால் அதையும் ஏற்றுக்கொள்கிறேன்.''

அறிவுவென்றது. உணர்வு மயங்கிற்று. அவருடைய முகமெல்லாம் வியர்த்துக் கொட்டியது. அவருடைய கண்கள் அரை மயக்கநிலையில் இருந்தன.

பஸ் ஒரு சந்தியில் நின்றது. ''ஏன் ''மாஸ்டர் இறங்கவில்லை'' என்ற குரல் கேட்டுத்திடுக்குற்று ஆ... வந்தாச்சு'' என்று தடுமாறிய படியே இறங்கினார்.

## (3)

அது ஒரு சிறிய அறையானாலும் மிகவும் அழகாகவும் கவர்ச்சியாகவும் இருந்தது. இயற்கை அழகு மிகு ஓவியங்களும் வாழ்க்கையில் வழிகாட்டிச்சென்ற பெரியோர்களின் படங்களும் நாற்புறச் சுவரையும் அழகுசெய்தன. வடக்குப்புறத்தில் பெரிய அலுவலகமேசை, அதற்குப் பக்கத்தில் புத்தர், யேசு, காந்தி ஆகியோரின் உருவச் சிலைகள். அதையொட்டி இரண்டு மூன்று அலுமாரிகளில் பல நூல்கள் அழகாக வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. அவ்வறையிலிருந்து மெல்லிய ஒடிக்குளோன்' வாசனையோடு கூடிய ஊதுபத்தி வாசம்அவ்வறைக்குட் போவோரை இன்பலோகத்திற்கு இழுத்துச் செல்லும்; மனதில் மகிழ்ச்சியை எழச் செய்யும். அன்று வெள்ளிக்கிழமை. காலையில் எழுந்ததும் குளித்து அழகுபடுத்தி மும்மூர்த்திகளையும் வணங்கிவிட்டு மனதைத் தூய்மைபெறச் செய்யும் நூல்களை மனம் ஒன்றிப்படிக்கும் அவரோ அரைத்தூக்கத்தில் தூய்மையில்லாது இருக்கின்றார். முன்னைய வேதனை இன்னமும் இருக்கிறது. திடீரென்று எழுந்து மேசையில் அமர்ந்துசமய நூல்களைஎடுத்தார். தொடர்ந்து படிக்க முடியவில்லை. மனிதனுக்கு எதனால்வரும் மனக்கவலைகளையும் சான்றோர் நூல்கள் மறக்கச்செய்யலாம். ஆனால்

ஆண்களைப்போல அடிக்கொரு நிலை மாற்றம் கொள்பவளல்ல, என்று எண்ணியது. அவரால் எதையுமே தீர்மானம் செய்ய முடியவில்லை படித்தவரல்லவா? பலதையும் எண்ணிக்கலங்கினார். அவரது அறை இருட்டைக்கண்டு பல நாளாயின. அவரது உள்ளத்தில்வேதனை நிரம்பியிருப்பது போலஅவரது அத்தூயஅறை சிகரெட் புகையினாற் சூழப்பட்டிருந்தது. அவரது வாழ்க்கைப் பாதை ஒளி மங்கியதுபோல அம்மும்மூர்த்திகளின் தூய உருவங்கள் தூசுபடிந்திருந்தன. எங்குமே தூசி.

இரவு பன்னிரண்டு மணியிருக்கும், மெதுவாக எழுந்தார். மேசையினறையைத் திறந்து ஒருசிறிய புட்டியை எடுத்தார். அதற்குள்வெண்ணிற மாத்திரைகள் இருந்தன. அம்மாத்திரைகளை உள்ளங்கையிற் கொட்டிக்கொண்டார். திடீரென மூலையில் ஒரு மின்னல்! அந்த மாத்திரையிலே அழகான மங்கை. கண்களிலே கண்ணீர்! கைகளிலே தூக்கமாத்திரைகள். ஆம்...! அன்றொரு நாள் ''உங்களைப்பிரிந்தால் உங்களைப் பின்தொடர இவை எனக்கு வழிகாட்டப் போதும். என்றால் எக்காரணம் கொண்டும் உங்களையன்றி வேறு யாரையும் நினைக்கவும் முடியாது'' என்று சொன்ன சொல் இன்றும் காதிலே ஒலித்து உருவம் பெற்றுக்காட்சிகொடுத்தது. கைகள் நடுங்கின. கையிலிருந்த மாத்திரைகள் சிதறின. கண்களிலிருந்தும் கண்ணீர் தாரைதாரையாக வடிந்தது. சிந்தனையிலிருந்தவர் நிமிர்ந்து மும்மூர்த்திகளைப் பார்த்தார். அவர்களுக்குள்ளே,


''அன்பேஉலகமகாசக்தி''

''நம்பினோர் கைவிடப்படார்''

''ஏமாற்றுவோர் ஏமாற்றப்படுவார்கள்''.

அழுபவர் பாக்கியவான்கள். ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவார்களென்ற வாக்கியங்கள் காணப்பட்டன. ஆம், உருவம் பாராது உள்ளம் பார்த்து அன்பு கொண்டார். அந்த அன்பை இழந்து வாழ முடியாது. அந்த அன்பைஎதிர்பார்த்து அழுதுகொண்டு இருக்கின்றார். எப்பொழுது அவருக்கு அமைதிகிட்டுமோ? அவர் கண்ணிலிருந்து வடியும் கண்ணீர் வற்றியதும் வெளிவரும் பெருமூச்சிலாவது அமைதிகிட்டுமா? புயலுக்குப் பின்னால அமைதிதோன்றுமா அல்லது அந்தப்புயலிலேயே எல்லாம் அழிந்துவிடுமா? காலம் பதில்சொல்லும்!

(யவும் கற்பனை)


மங்கையர் அங்கங்களுக்கு அதீத அழகைக்கொடுப்பது.
நவ நாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகை மாளிகையின்
தங்க வைர நகைகள். .
இன்றே விஜயஞ்செய்யுங்கள்
தெய்வா நகை மாளிகை
(முட்டாஸ்கடைச் சந்திக்கு அருகாமை)
173, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.



## நம்நாட்டுக் கலைஞர்கள்



ஆடற் கலைக்கு அழகூட்டுகிறார்கள்!

ஈழத்து கலையுலகுக்கு மூன்று கலைச் சகோதரிகள் கிடைத்திருக்கிறார்கள்! ஆடற் தெய்வம் ஆனந்தக் கூத்தாடுகிறாள்!

தில்லையில் தாண்டவமாடிய நடராஜனின் காலடிகளுக்கு தம்மை அர்ப்பணித்து தமது கலை வாழ்வை ஆரம்பித்துள்ளனர்:

நாட்டிய கலாகேசரி வழுவூர் இராமையாபிள்ளையிடம்

தனது மாணவிகள் மீதுள்ள அபிமானத்தாலும், அவர்கள் ஆற்றல் மீதுள்ள நம்பிக்கையாலும் கோஷ்டியினருடனேயே தமிழகத்திலிருந்து பறந்துவந்து, நடன அரங்கேற்றத்துக்கு நட்டுவாங்கம் செய்தார்!

### கலைவாழ்வின் எதிர்காலம்

சரோஜினிதேவி, விசாகா

## ராஜன்

குருகுல முறைப்படி பரதம் பயின்று, கொழும்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் சமீபத்தில் தமது நடனத்தை அரங்கேற்றினார்கள், இந்தக் கலைச் சகோதரிகள்.

தேவி, தர்மகுலதேவி ஆகிய இந்த மூன்று சகோதரிகளின் கலைவாழ்வின் எதிர்காலத்தை முதல் நடன அரங்கேற்றமே நிர்ணயித்துவிட்டது!

# நடிகை ஷீலா வெளி நாடு போகிறார்!

நடிகை ஷீலாதேவி சினிமாப்பட விழாவில் கலந்துகொள்வதற்காக வெளிநாடு போகிறார்! இந்த மாத கடைசியில் ஆஸ்திரேலியா நாட்டில் உள்ள 'சிட்னி' நகரத்தில் சினிமாப்பட விழா நடக்கிறது.

இந்தப் படவிழாவுக்கு 'அக்னி புத்ரி' என்ற மலையாளப்படத்தைத்தேர்ந்தெடுத்துள்ளனர். இந்தப் படத்தில் ஷீலாதேவி, பிரேம்நசீர் ஆகியோர் நடித்துள்ளனர்.

பிரேம்நவாஸ் இதைத் தயாரித்துள்ளார்.

இந்தப் படவிழாவில் கலந்துகொள்ள பிரேம்நசீர், ஷீலாதேவி, பிரேம் நவாஸ் டைரக்டர் கிருஷ்ணன் ஆகியோர் சிட்னி போகிறார்கள்.

### தமிழில் 'அக்னி புத்ரி'

'அக்னிபுத்ரி' தற்போது தமிழிலும் தயாராகி வருகிறது. 'காணிக்கை' என்ற பெயரில் தயாராகும் இந்தப் படத்தில் சிவாஜியும், பத்மினியும் நடித்துவருகிறார்கள்.

# கலைச் செல்விகள்

## ஸ்ரீகாந்தம் சகோதரிகள்

பார்த்தவர்கள் எல்லாருமே பாராட்டுமளவுக்கு பாவம் என்ற மூன்று வித்துக்களில் உருவாகி வளர்ந்த பரதம் என்ற தெய்வீகக்கலையைச் செய்தனர், ஸ்ரீகாந்தம் சகோதரிகள்.

வடமராட்சியிலுள்ள வல்வெட்டி இந்தக் கலைச் சகோதரிகளின் பிறப்பிடம்; கொழும்பு வசிப்பிடம். கலையார்வமிக்க ஸ்ரீகாந்தம், ராஜேஸ்வரி தம்பதிகளின் புதல்விகள் இவர்கள்

### சின்ன வயதில் கலை ஆர்வம்

சின்ன வயதிலேயே நடன ஆசை இவர்களுடன் ஒட்டிக்கொண்டுவிட்டது. ஆங்காங்கே நடன ஆசிரியர்களிடம் பரதம் பயின்றனர்.

'அரை குறை' பரதக் கலையைமுற்றும்முழுதாகப் பயின்றிட தமிழகத்துக்குச் சென்றனர்' சகோதரிகள்!

நாட்டியகலா வல்லுனர் வழுவூராரின் இல்லத்தில் தங்கியிருந்து சில ஆண்டுகள் முறைப்படி பரதம் பயின்றனர்.

கொழும்பு மகளிர் கல்லூரியில் நடந்த இவர்களது அரங்கேற்றத்தைத் தொடர்ந்து பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்ட

(5ம் பக்கம் பார்க்க)

# சிவாஜியை வைத்து தேவர் ஏன் படம் எடுப்பதில்லை

''சிறுவனும் சிங்கமும்'' என்ற பெயரில் சாண்டோ சின்னப்பாதேவர் ஒரு படம் தயாரிக்கப்போகிறார்.

### பேட்டி

சினிமாஅதிபர் சாண்டோ சின்னப்பாதேவர் பழனிக்கு வந்திருந்தார். அப்போது அவரை 'மாலைமுரசு' நிருபர் பேட்டிகண்டார்.

அதன் விபரம் வருமாறு:

### கதைக்கு முக்கியத்துவம்.

நிருபர்: தாங்கள் பெரும்பாலும் கதைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் படம்

(5-ம் பக்கம் பார்க்க)


## வைஜயந்தி சிறந்த சினிமா நடிகை!

சிறந்த சினிமா நடிகையாக வைஜயந்திமாலாவை தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தார் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

ஆண்டுதோறும் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தார் கலைத்துறையில் சிறந்த சேவை செய்தவர்களுக்கு விருதுகள்வழங்கிப்பாராட்டி வருவது தெரிந்ததே!

இந்த ஆண்டு சிறந்த சினிமா நடிகையாக வைஜயந்திமாலா தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்! அவருக்கு கலாசிகாமணி என்ற பட்டம் அளிக்கப்படும்!

## யாழ்ப்பாணத்து இசைக் கலைஞர் வானொலியில் பாடுகிறார்!



ஈழத்து இசைக்கலைஞர் கரவெட்டி ஏ. கே. கருணாகரன் இம்மாதம் 20-ம் திகதி பாடுகிறார். அன்று முற்பகல் 12 மணியிலிருந்து 12-30 வரையும் இரவு 8 மணியிலிருந்து 8-30 மணி வரை இவர் பாடுவார்.

தற்போது இவர் சென்னை அடையாறு அரசாங்க கர்னாடகசங்கீத மத்திய மகா வித்தியாலயத்தில் டிப்ளோமோ பட்டம்பெறுவதற்காக பயின்றுகொண்டிருக்கிறார்.

சிறுவயதிலேயே கல்லூரிகளுக்கிடையில்நடைபெறும் சங்கீதப்போட்டியில் பல பரிசுகளைத்தட்டிக் கொண்டவர் இவர். 1968-ம் ஆண்டு நடைபெற்ற வித்துவான் பரீட்சையில் வாய்ப்பாட்டில் முதல் தரத்தில் சித்தி எய்திய பெருமை இவருக்கு உண்டு.


''லீடன்'' LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லீடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிறவெறிக் கொடுமையை நீக்க முயன்ற லிங்சன் மறைந்தாலும் அவரது நினைவு மறையாது நிற்கிறது. சென்ற 14-ம் திகதி அமரர் ஆப்பிரஹாம் லிங்கனை உலகு நினைவுகூர்ந்தது. அவரது உயர்ந்த கொள்கையில் நிறைந்த நம்பிக்கை வைத்துள்ள கைதடியைச் சேர்ந்த திரு. த சுப்பிரமணியம் லிங்கனை இங்கு தமது சித்திரத்தால் வரைந்து உயிரூட்டியுள்ளார்.

# இறை பக்தியற்ற ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறினுள் அந்தத் தாய். ''என்னருமைத் தாயே! பாலிலே தண்ணீர் கலப்பது கூடாதென்று கலீபா உமர் கட்டளையிட்டுள்ளார். ஆகவே தண்ணீர் கலந்தால் கலீபா எம்மைத் தண்டிப்பார். ஆதலால் நமக்கு வேண்டாம்தாயே'' என்று கூறுகிறுள் மகள். அதைக்கேட்டதாய் ''மகளே பாலிலே நீர் கலப்பதைக் கலீபா பார்த்துக் கொண்டா நிற்கிறுர். பேசாமல் தண்ணீரைக்கொண்டுவா' என்று கூறுகிறுள். மகளோ சிறிதும் தயங்காது ''தாயே! பாலிலே நீர் கலப்பதைக்கலீபா பார்க்காதுவிட்டாலென்ன? ஆண்டவன் பார்த்துக்கொண்டிருக்கிறுனே! மறுமையிலே நம்மை நரகிலே இட்டுத் தண்டிப்பானே? வேண்டாம்; வேண்டாம்' எனக் கூறித் தாயையும் நல்வழிப்படுத்துகிறுள் அந்நல்லியல்புநங்கை. இச்சம்பவம் அத்தனையையும் செவியுற்று மாறுவேடத்திலே சென்ற நாட்டின் தலைவர் - கலீபா உமரே பாறூக் அவர்கள் இறைவனுக்கு நன்றிசெலுத்திவிட்டு தன்வீடு சென்று வேலையாள் மூலம் தாயையும் மகளையும் அழைப்பித்து நடந்த சம்பவங்களை விசாரித்து நல்லது தீயது எதுவென விளக்கி இறைவனுக்குப் பணிந்த அந்நல்லியல்புள்ள நங்கையை வாழ்த்தியதோடு பரிசாக கலீபாவின் மகனையும் அந்நங்கைக்கு மணமுடித்துவைத்தார். தாய் கலீபாவிடம் அறிவைக்கற்று மனத்திருப்தியுடன் திருந்தி மகிழ்ந்தார். இங்கு அறிவுக்கும் இறைபக்திக்கும் முதலிடம் கொடுத்து பால் விற்பவள் மகளை நாட்டின் தலைவருடைய மகன் மணம் முடிக்கிறுர். இன்றைய நமது நிலையைச் சீர்தூக்கிப்பார்த்துத் திருந்துதல் வேண்டாமா? எத்தனை கன்னியர் வாழவழியின்றிப் பெருமூச்சு

இதுவரை பொறுமையோடு ஓரமாய் நின்று அவதானத்துடன் உற்றுக் கேட்டுக்கொண்டு இறைபக்தியோடு நின்ற கலீபாவுக்கு மனநிம்மதியேற்படவில்லை. உள்ளே சென்றுர். 'தாயே அடுப்பில் என்ன சமைக்கிறீர்கள்? கண்கள் கலங்குதலின் காரணம் யாதோ?'' என வினவுகின்றுர் சற்றுத் தழதழத்த குரலில்.

நாங்கள் உமர் பாறூக் (கலீபா) உடைய குடிகள். எனது குழந்தைகள் தாங்கொணுத பசியினுலே அழுதனர். என்னிடம் உணவு எதுவுமேயில்லை. ஆகவே கலசத்தில் வெறும் நீரை யூற்றிக் கொதிக்க வைத்தேன். பிள்ளைகள் அழுவதைச் சகிக்காத நான் ''உங்களுக்காகச் சாதம் சமைக்கின்றேன். படுத்துக்கொள்ளுங்கள். எழுப்பித் தருகின்றேன்'' என்றுகூறி அக்குழந்தைகளை ஏமாற்றிப் படுக்கவும் செய்து விட்டேன். ஆனுல் எனதுமனம் நிம்மதியடையவில்லை. ஏமாற்றம் செய்த நெஞ்சம் எப்படி நிம்மதியடையும்? இது எங்கள் நாட்டின் தலைவராகிய கலீபா உமர் கவனித்திருக்கவேண்டுமே. இது அவருடைய கடமையும் கூடவன்றே. ஆகவே எங்கள் கலீபா தமது கடமையிலே தவறியமைக்கு நாளை அவரிடம் நிச்சயமாகக் கேள்விகள் கேட்கப்படும்'' என்று கூறுகிறுள். அந்த மாதுசிரோன்மணி ஒருவித திருப்தியுடன்.

இதைக்கேட்ட மாறுவேடந்தரித்த கலீபா உமர் பாறூக், ''அம்மணி! நீங்கள் கவலைப்படாதீர்கள். இதோ நான் பிள்ளைகளுக்கு ஏதாவது கொண்டு வருகின்றேன்'' என்றுகூறி ஓடோடியும் வந்துதமது தோளிலே மாவும் பேரீச்சம்பழமும் சுமந்து சென்று தாமும் சேர்ந்து உணவு தயாரித்துக் குழந்தைகளை எழுப்பி

# சௌமிய புத்தாண்டில் உங்கள் பலன்

சௌமிய புத்தாண்டில் கோள்கள் தமது பெயர்ச்சி மூலம் குபேர சம்பத்தை அள்ளிக் கொடுக்குமா என்று சிலர் எதிர் நோக்குகிறுர்கள். முந்தை வினைப் பட்டுப்பிணியில் உழலும் ஒருசாரார் இந்நோய் இவ்வாண்டில் குணமடையும் வாய்ப்பு உண்டா என்று எண்ணப் நாடியுள்ளார்கள். வழக்கில் எதிராளியாய்த் தவிக்கும் பலர்எமக்கு விமோசனமுண்டா என்று வினவுகிறுர்கள். உத்தியோக வாய்ப்புண்டா என்று படித்த வாலிபர் ஒருபுறம் தமது ஜெனன ஜாதகங்களுடன் எம்மை நாடுகிறுர்கள்.

மக்கள் மன ஐயப்பாட்டுக்குஇப்பத்திமூலம் தீர்வு காண முனைகின்றேன். ஜெனன ஜாதகத்தில் சந்திரன் நின்ற இராசி கொண்டு உங்கள் பலாபலன்களையறியுங்கள்.

## மேலகரவை சோதிடர் காவ. சிவப்பிரகாசன்

**மேடம்:** பலமாநிலத்தைஒரு குடைக்கீழாண்ட மாபலிச் சக்கரவர்த்தி கோசரத்தில் 6-ல் குரு நிலைகொண்டபொழுதுதான் சிறைபுக நேர்ந்தது. இவர்க்கு 7 1/2 சனி நடுக்கூறு. தீவிர கஷ்டபலனுண்டு. உஷ்ண ரோகங்கள் பல தோன்றும். பண வருவாயுண்டு. புரட்டாதி 1-ந் திகதிவரை செலவுக்கு ஈடுசெய்யமுடியாதநிலை, உத்தியோகத்தை விவாகத்தை நாடும் பலர் முயற்சியைக் கைவிட நேரும். புரட்டாதி 3-ல் நீதிஸ்தலம் போகவும் வேண்டிவரும். கார்த்திகை 11-ந் தேதியிலிருந்து குடும்பத்தொல்லை நீங்கும்.

**இடபம்** அதிர்ஷ்ட தேவதை இவர்கள்பக்கம்தான். ஆடை ஆபரணச் சிறப்புண்டு. பிள்ளைப்பாக்கியம் கிட்டும். சிறந்த கல்விக்கு வகைசெய்


பணவிரயத்தைக் காட்டுகின்றது. புரட்டாதிமாதம்வரை குடும்பத் தொல்லைகளுமுண்டு. பெண்பாலார்குடும்பவிஷயத்தில் பாதிப்புக் காண்பர். கார்த்திகை 11-ந் திகதியின்மேல்விவாகபந்தம் பலருக்குக் கிட்டும். வருவாயதிகரிக்கும்.

**மிதுனம்:** இவர்க்கு நிலச் சுவாந்தாராகும் வாய்ப்புண்டாகும். கமத்தொழில் பலிதம் காட்டும். சனியின் நிலையால் அநேகருக்குச் சுகவீனம், கண்டம் நேரலாம். சிநேகிதர் சக ஊழியருடன் மனஸ்தாபங்கள் தோன்றும். புத்திரரிடை பீடை, படிப்பு மந்த நிலை தோன்றும். ஒருசாரார்காதல் விவகாரத்தில் ஈடுபாடு காண்பர். கார்த்திகை மாதம்வரை பணக் கஷ்டமுண்டு.

**கடகம்-** கொள்வனவு வகையில் மிகுந்த லாபம் கிட்டும். துரியோதனனும் இராசிக்கு 3ல்குருநின்றகாலத்தில் மாண்டான். சிலருக்குக் கண்டமும் நேரலாம்

இவர்க்கும் குடும்பச் சிறப்புண்டு. புகையிரத, பஸ் தொழிலாளருக்கு மேன்மையான பலன் கிட்டும். ஆயினும் புரட்டாதி மாதத்தின் மேல் விபத்துக்களதிகரிக்கும். அவமானத்திற்குள்ளாக நேரும்.

**சிங்கம்-** இவர்களுக்குப் பணநிறைவுண்டு. வியாபாரம் பன்மடங்கு பெருகும். இவர்களுக்கு விவசாய பலிதமில்லை. விபத்துக்கள் புரட்டாதி மாதம் வரையில் நிகழ இடமுண்டு. வேலைத்தலங்களில் அபிப்பிராய பேதத்தால் சிறு சச்சரவு தோன்றும். இவர்கள் கடற்பயணங்களைத் தவிர்த்தல் வேண்டும். சமய விவகாரங்களிலும் இவர்க்குச் சச்சரவு தோன்றும். படிப்பு மந்தநிலை காட்டும். உத்தியோக வாய்ப்புண்டு.



தோர் கூடுதலாக வியாதியால் பீடிக்கப்படுவர். இவர்களுக்கு விபத்துக்கள் நேரிடலாம். புரட்டாதி மாதத்திலிருந்து சிறிது கஷ்டநிலை தோன்றும். ஆவணி மாதத்தின் மேல் புத்திரப்பேறு கிட்டும். சோதரர்களிடை வெறுப்பு மனப்பான்மை தோன்றும் உத்தியோகத்தை எதிர்பார்ப்பவருக்கு மகிழ்ச்சியான செய்தி மாசிமாதத்தின் மேல் கிட்டும்.

**துலாம்:** வியாபாரஞ் செய்வோர்க்கு ஒரு கடினகாலம். முதலீடு அழிவுபடும். வருவாய் குன்றும். ஆயினும் கார்த்திகை மாதத்தின் மேல் நற்பலனுண்டு. குடும்பத்தில் சிலர் பிரிவு காண்பர். கமஞ் செய்வோர் நல்ல வருவாய் காண்பர். மாணவர்கள் படிப்பில் தனிப்பட நாட்டம் சொள்வர். சகோதர பான்மையுடன் எவரையும் ஆதரிப்பார். கள்வர்பயமுண்டு. உத்தியோகத்தை எதிர்பார்ப்பவருக்குச் சிறிது ஏமாற்றம்தான். ஆவணியின் மேல் நற்பலனுண்டு. வியாதியஸ்தர் பிணி நீங்கும்.

**விருச்சிகம்:** கொலை கொள்ளை குற்றங்களில் சிலர் ஈடுபடநேரிடும் வியாபாரம் அழிவு காணும். கமக்காரர் பயிர்வகை நட்டம் காண்பர். சுகவீனங்கள் அதிகரிக்கும். நீரிழிவு கயரோகம் முதலியன தோன்றலாம். அமைதியின்மை இவர்பால் குடிகொள்ளும். பணவகை சீரடையும். ஆடிமாசம் வரை விபத்துகளதிகரிக்க இட

எதிர் பார்ப்பவர் பலர்க்கு ஆவணி மாதம் நற்பலன் கொடுக்கும். உத்தியோக வாய்ப்புண்டு. சிலர் சமய வகையில் சிக்கல்களில் அவதியுற நேரிடும்.

**தனு:** தொழில் வகை விருத்தியுண்டாகும் கார்த்திகை மாதத்தின் மேல் விவாகப்பேறு புத்திரபாக்கியம் கிட்டும். வரவிற்குமேலான செலவுண்டாகும். இவர்க்கு 10-ல் குருபகவான் சஞ்சாரம் செய்கிறுர். கார்த்திகை மாதம் வரை கஷ்ட பலன் நிகழும் பணமுடை தோன்றும். வியாதியஸ்தர் குணமடைவர். வருஷக்கடைக் கூறில் உத்தியோகப்பேறு சிலருக்குக் கிடைக்கும். ஆனி, ஆடி மாதங்களில் விபத்துக்குள்ளாக நேரும்.

**மகரம்:** இவ்விராசிக்காரர் பெருத்த யோகபலனை எதிர்பார்க்கலாம்: எதிர்பாராத வகையில் பணம் சொத்து சேரும். புரட்டாதி மாதத்தின் மேல் கூடுதலாக உத்தியோகவாய்ப்புண்டு. ஆடி மாசத்திற்குள்ளாக திடீர் நோயவாய்ப்படநேரும். சனி இராகு இவர்க்குச் சாந்தி செய்தால்ஓரளவுக்குச்சாந்தியுண்டு. படிப்பு மேன்மையுண்டு. கூடுதலாகக் கார்த்திகையின் மேல் விவாகப் பிராப்தி சிலர்க்குக் கிட்டும்.

**கும்பம்:** இவர்க்கு 8 ல் குரு. வாலி தமது இராசிக்கு 8ல் குரு இருந்த காலத்தில்தான் இராமன் கையம்பிற்கு இரையானுன் இவர்களை விபத்துத் தேடி நிற்கும். புகையிரதம், பஸ் இவற்றின் சாரதியாகவிருந்தால் மிக முன்னெச்சரிக்கையுடன் கடமை புரியவும். சிலர் திடீர் நோய்வாய்ப்பட நேரும். வியாபாரிகட்கு மந்த நிலைதான். சிக்கல்கள் தோன்றி நீதிஸ்தலம் செல்லவும் நேரும். மாணவருக்கு ஊக்கத்தை அள்ளிக் கொடுக்கும். விவாகத்தை எதிர் நோக்குவோர் பலருக்கு ஏமாற்றம்தான்.

**மீனம்:** இவர்க்குப் பணத்தானம் கார்த்திகை 11வரை பாதிப்புக் காட்டும். எவரையும் நேசக்கரம் நீட்டி அழைப்பர். கமக்காரராயின் ஓரளவு பாதிப்பு நிலைதான். குடும்பத்தில் அன்யோன்யம் உண்டு. விவாகத்தை எதிர் பார்க்கும் பலர் நன்மை பெறுவர். வருட நடுக்கூறில் சில வியாதிகள் தோன்றி மறையும். புரட்டாதி மாதத்தின்மேல் விபத்துகள் நேர இடமுண்டு. வருடக் கடைக் கூறில் எதிர்பாராத வகையில் பணப்பேறு கிட்டும். மாணவர் படிப்பில் கவனஞ் செலுத்தாது கார்த்திகை

## கலைச்செல்விகள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திலும் இவர்களது நடன அரங்கேற்றம் நடந்தது! சிறப்பாகச் சகோதரிகள் ஆடினர்!

### ஆற்றல்மிக்கவர்கள்

''கட்டுப்பாட்டுடன், கலையைப் பயின்றிட வேண்டுமென்ற ஆர்வமும் ஆற்றலுமிக்கவர்கள் ஸ்ரீகாந்தம் சகோதரிகள்'' என்று அவர்களது குருவான வழுவூராரே மனம் விட்டுச் சொல்கிறுர்.

இவர்களது நடன அரங்கேற்றத்துக்குத் தலைமை வகித்த வருமான வரி இலாகா கமிஷனர் 'கலை ரசிகர்' திரு. சிற்றம்பலம் ஸ்ரீகாந்தம் சகோதரிகளின் பரதத்தைப் பார்த்துவிட்டு அற்புதமாக ஆடுகிறுர்களென்று பாராட்டினுர்.

''நாட்டியக் கலைக்குக் காலமெல்லாம் சேவையாற்றவேண்டும். ஈழத்தில் நாட்டியக் கலைக்கு இன்னும் பல முத்துக்களைச் சேர்த்தளிக்கவேண்டும்'' என்று கூறும் இந்த கலைச் சகோதரிகள் கொழும்பில் பரதப் பள்ளியொன்றை நிறுவி நாட்டியக் கலைக்குச் சேவையாற்றத் தொடங்கியுள்ளனர்.

### முதலிடம் "தர்மா"வுக்கு

மூன்று சகோதரிகளும் ஒவ்வொரு இணையாக ஈடு கொடுத்து ஆடுகின்றனர். ஆனுலும் இளையவள் ''தர்மா''வின் நடனத்தில் ஒரு தனிக் கவர்ச்சி! அழகுக்கு அழகூட்டி, தன் அழகு வதனத்தால் பாவம் காட்டிப் பார்ப்பவர் இதயத்திலேயே ஆடச் செய்கிறுர்!

''சரோஜினி'' யும் ''விசாகா''வும் இதனுல் குறைந்துவிட்டார்களென்றில்லை. அவர்களும் 'தர்மா'வுக்கு ஈடுகொடுத்து நடனமாடத்தான் செய்கிறுர்கள்.

**'சரோஜினி'யும் 'விசாகா'வும், 'தர்மா'வும் ஈழத்து நாட்டிய உலகுக்குக் கிடைத்த கலைச் செல்விகள்!**

## சிவாஜியை........

(4-ம்பக்கத்தொடர்ச்சி)

எடுப்பதாகக் கூறப்படுகிறதே.

சின்னப்பாதேவர்: இனி வரும் படங்களில் கதைக்கு முக்கியத்துவம் இருக்கும். ஜனரஞ்சனமான படமாக இருக்கும். இதன்முன்னேடியாகத்தான் இப்போது

## ம. பொ. சி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தின் கவனத்தை ஈர்ப்பதற்காகவே இப்போராட்டத்தை நடாத்தப்போவதாகவும், காங்கிரஸ்காரர்கள் கூட பலர் இந்தக் கோரிக்கையை ஆதரிக்கிறுர்கள் என்றும், அவர் சொன்னுர்.

அதிகாரத்தைப் பரவலாக்கி மாநிலத்துக்கு அதிக அதிகாரம் வழங்க வேண்டுமென்பதே தமது கோரிக்கையென்றும், ஆந்திராவில் முதலமைச்சர் பிரமானந்த ரெட்டிகூட இந்தக் கோரிக்கையைஆதரிக்கிறுர் என்றும் அவர் சொன்னுர்.

''தாங்கள் நடாத்தும் போராட்டத்தினுல், தி. மு. க. அரசுக்கு சங்கடமான நிலை உருவாகுமா?''

''எனது போராட்டத்தை அவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர். தி. மு. க. வினர் முன்னர் பிரிவினைக் கோரிக்கை வைத்திருந்தனர். இப்போது அதனை விட்டுவிட்டாலும், சுயாட்சிக் கோரிக்கையை அவர்கள் கோரினுல் அதைப் 'பிரிவினை'க் கோரிக்கை என்றும் பிரச்சாரம் செய்யக் கூடுமல்லவா? ம. பொ. சி. அந்தக் கோரிக்கையை முன்வைத்துப் போராட்டம் நடாத்தினுல், யாருமே ஒன்றும் சொல்லமுடியாது. தமிழரசுக் கழகமே அந்தப் போராட்டத்தை நடாத்துகிறது என்பதை நான் வலியுறுத்தியுள்ளேன்'' என்று மேலும் விளக்கிக் கூறினுர்.

### ஆகஸ்ட்டில் போராட்டம்

தமிழ் நாட்டிலுள்ள மத்திய அரசுக்காரியாலயங்களுக்கு முன்னுல்தான் ம. பொ. சி. இந்தப் போராட்டத்தை நடாத்த உள்ளார். அப்படி போராட்டம் நடாத்தும் போது தி. மு. க. வுக்கு ஒரு தர்மசங்கடமான நிலை உருவாகும் ம. பொ. சி. அந்த தர்மசங்கடமான நிலையைப் போக்கி விட்டார். ''ம. பொ. சி. என்பதற்காக கைது செய்யாமல் இருக்கவேண்டியதில்லை. நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள். என் போராட்டம் மாநிலத்துக்கு எதிரானதல்ல மத்திய அரசுக்கு எதிரானது'' என்று கிராமணியார் தமிழக முதலமைச்சர் கருணுநிதியிடம் தெரிவித்துள்ளாராம்.

''இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் தமிழ்நாடு தி. மு. க. வுக்குமிடையில் தொடர்பு இருப்பதாக இங்கு சிலர் பேசிக் கொள்கிறுர்களே?'' என்று ம. பொ. சி ஐயாவிடம் கடைசியாகக் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வுக்கும் இறைபக்திக்கும் முதலிடம் கொடுத்து பால் விற்பவள் மகளை நாட்டின் தலைவருடைய மகன் மணம் முடிக்கிறார். இன்றைய நமது நிலையைச் சீர்தூக்கிப்பார்த்துத் திருந்துதல் வேண்டாமா? எத்தனை கன்னியர் வாழவழியின்றிப் பெருமூச்சு விட்டுத்தவிக்கின்றனர் ஸ்ரீதனப்பேயினால்.

இப்படியாக நாட்டிலுள்ள தலைவர்கள் வாழ்ந்துகாட்டினார்கள், குடிமக்கள், "அரசனெவ்வழி குடிகளவ்வழி" என்பதற்கேற்பவும் "யாதுமூரே யாவரும்கேளிர்" என்பதை நினைந்தும் வாழ்ந்து நாட்டைக் காத்து ஒப்புடன் முகமலர்ந்து வாழ்ந்துவந்தனர் இவ்வாறு அரசனும்குடிகளும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ள சங்கிலி போலாயினர். அதனால் வலிமையேற்பட்டது நாட்டிலே சமாதானம் நிலவியது. மாற்றாரின் பகை முறியடிக்கப்பட்டது வீட்டிலும் நாட்டிலும் வழிபாடு, உண்மை, நேர்மை, சத்தியம், சன்மார்க்கம், ஒற்றுமை ஆதிய இன்னோரன்னவும் பிறவும் வளர் மதிபோன்றும் விண்மீன்கள் ஒப்பவும் பிரகாசத்துடன் சுடர்விட்டு ஒளிவீசின. எல்லா வீடுகளும் கவலையின்றிக் குதூகலமாய் விளங்கிய காட்சியை என்னென்று எடுத்துரைப்பேன் என்கின்றார் காவியப்புலவர் உமர். சுருங்கக்கூறின் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து காட்டியும் பிறர்க்கு வரும் இன்னல் தமக்கென உணர்ந்தும் தியாக சிந்தையொடு வாழ்ந்தனர். உதாரணமாக உணர்ச்சி வயப்படும் மற்றொரு சம்பவத்தைப்பாருங்கள். ஒரு நள்ளிரவு; நாட்டின் தலைவர் (கலீபா) உமர் பாறூக் அவர்கள்மாறுவேடம் தாங்கிக் கொண்டு குடிகளின் நிலைமையை அறியப் புறப்படுகிறார். ஒரு குடிசையிலிருந்து குழந்தை வீரிட்டு அழும் சத்தம் கலீபா அவர்களின் இதயத்தைத் தொட்டே விட்டது. விரைவாகச் சென்று வீட்டினோரத்தில் நின்று விஷயத்தைக் கவனிக்கின்றார். கலீபா உமர் பாறூக் (றழி) அவர்கள்.

குழந்தைகள் பசிக் கொடுமை தாங்கமுடியாது தொடர்ந்து ஏங்கி ஏங்கி அழுகின்றார்கள். தாயானவள் அடுப்பில் ஒரு கலசத்தில் ஏதோ வைத்து எரிக்கின்றாள். அம்மாதுவின் வாய் எதை எதையோ முணுமுணுக்கின்றது. கண்களிலிருந்துகண்ணீர்த் துளிகளும் விழுகின்றன. சிறிது நேரத்தில் குழந்தைகளின் அழுகை ஓய்ந்து விடுகின்றது. உறங்கியும் விடுகிறார்கள். பெரியதொரு நம்பிக்கையுடன்.

கவலைப்படாதீர்கள். இதோ நான் பிள்ளைகளுக்கு ஏதாவது கொண்டு வருகின்றேன்'' என்றுகூறி ஓடோடியும் வந்துதமது தோளிலே மாவும் பேரிச்சம்பழமும் சுமந்து சென்று தாமும் சேர்ந்து உணவு தயாரித்துக் குழந்தைகளை எழுப்பி உணவூட்டி அந்தத் தாயையும் சமாதானப்படுத்தினார்கள். அந்தமாதுசிரோன்மணி அவரை மனமார வாழ்த்திவிட்டு நீங்கள்தான் எங்கள் கலீபாவாக இருக்கத் தகுந்தவர்கள் எனப் போற்றுகிறாள். இதைக்கேட்ட மாறுவேடந்தரித்திருந்த கலீபா உமரே பாறூக் அவர்கள் உள்ளூற மகிழ்ந்து எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சிக்கொண்டு, குழந்தைகள் பசி தீர்ந்து சிரித்துக் குதூகலமடைவதையும் சிறிது நேரம் பார்த்துவிட்டுத், "தாயே, நாளை நீங்கள் கலீபாவுடைய சபைக்கு வாருங்கள். நானும் அங்கே இருப்பேன். உங்களுடைய குறையைக் கவனித்து வேண்டுவன செய்வோம்'' என்றுகூறி விடைபெற்றுச் சென்றனர். பார்த்தீர்களா நாட்டின் முடிசூடா மன்னனின் சிந்தையை.

இப்போது சமுதாயத்தின் தலைவர்களும் தனவந்தர்களும் சிந்தனை செய்து செயலாற்ற முன் வரட்டும். ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளையும் விடக் கூரியது என்பதையுணர்ந்து அத் தலைவர்களும், தனவந்தர்களும் இறைவன் அவர்களுக்குக் கொடுத்தவற்றிலிருந்து இறைவனது அடியார்களான ஏழை எளியவர்களைப் பாதுகாக்கட்டும். தர்மம் தானாகவே தலை தூக்கி நின்று நாட்டைக் காக்கவும் நாட்டிற்காகத் தன்னைத் தியாகம் செய்யவும் தயாராகிவிடுமன்றோ. அதன் காரணமாக இங்குமொரு சுவனத்தின் நறும் பூங்காக்களைக் காணுதல் சாலுமன்றோ.

ஆதலில் நாம் முதலில் ஆணித்தரமாக இறைவனை உண்மையாக நேசிப்போம். இறைமறைகூறும் விதிக்கிணங்க முற்றும் வழிப்பட்டுச் சிந்தை, சொல், செயல் ஆகிய மூன்றும் ஒரு கருத்தாயமைய ஒழுகுவோம். ஒவ்வொரு வீடும் நல்லறமாகித் தீயவை வேரோடு ஒழிய ஒன்றுபட்டு வாழ்வோம். இல்லார்க்கு உதவிநன்மை புகுத்தி வாழ்வோம். உணவு, உடை வீடு, கல்வி, ஞானம் இல்லையென்னுது உள்ளதாக்கி மகிழ்ந்து வாழ்வோம் என்று இப்புத்தாண்டிலே உறுதி பூண்டு ஒழுகி இம்மை, மறுமை இரண்டினதும் பெறுபேற்றினையெய்தி இன்புறுவோமாக.

3-ல் நீஸ்தலம் போகவும் வேண்டிவரும். கார்த்திகை 11-ந் தேதியிலிருந்து குடும்பத்தொல்லை நீங்கும்.

இடபம்: அதிர்ஷ்ட தேவதை இவர்கள்பக்கம்தான். ஆடை ஆபரணச் சிறப்புண்டு. பிள்ளைப்பாக்கியம் கிட்டும். சிறந்த கல்விக்கு வகைசெய்யும். சனிபகவானின் நிலை சிறிது கலவரங்கள் ஏற்படுவதையும், அவ்வகையால் தலங்களில் அபிப்பிராய பேதத்தால் சிறு சச்சரவு தோன்றும். இவர்கள் கடற்பயணங்களைத் தவிர்த்தல் வேண்டும். சமய விவகாரங்களிலும் இவர்க்குச் சச்சரவு தோன்றும். படிப்பு மந்தநிலை காட்டும். உத்தியோக வாய்ப்புண்டு.

கன்னி: இவர்களுக்கு நிலம் சொத்து சேரும், வியாபாரம் பெருகும் வயது முதிர்ந்த கமக்காரர் பயிர்வகை நட்டம் காண்பர். சுகவீனங்கள் அதிகரிக்கும். நீரிழிவு சுயரோகம் முதலியன தோன்றலாம். அமைதியின்மை இவர்பால் குடிகொள்ளும். பணவகை சீரடையும். ஆடிமாசம் வரை விபத்துகளதிகரிக்க இடமுண்டு. பெண்பாலார்க்கு அதி உன்னத காலம். விவாகத்தை பெறுவர். வருட நடுக்கூறில் சில வியாதிகள் தோன்றி மறையும். புரட்டாதி மாதத்தின்மேல் விபத்துகள் நேர இடமுண்டு. வருடக் கடைக்கூறில் எதிர்பாராத வகையில் பணப்பேறு கிட்டும். மாணவர் படிப்பில் கவனஞ் செலுத்தாது கார்த்திகை மாதம்வரை வீணே காலத்தை விரயஞ் செய்வர்.

# மூன்று வயதில் நாவலர் கடவுளை . .

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

போல, பறங்கியரை அடக்கி ஒடுக்கி, ஈழத்தை விட்டுத் துரத்த டச்சுக்காரர்கள் வந்தார்கள். அவர்கள் புரட்டஸ்தாந்து கிறீஸ்தவர்கள். அவர்கள் சைவத்திலும் பார்க்க, கத்தோலிக்க சமயத்தில்மெத்தவெறுப்புக் கொண்டவர்கள். பின்னர் டச்சுக்காரரிடமிருந்து ஈழத்தை ஆங்கிலேயர் கைப்பற்றினார்கள். ஆங்கிலேயர் அரசாங்கத்தை நடாத்துவதில் மிக்க திறமைவாய்ந்தவர்கள். ஆங்கிலேயர்களும் கிறீஸ்தவர்களே. மிஷனரிமாரென்னும் பாதிரிமார்களும் ஈழத் தமிழ் நாட்டில் வந்து சேர்ந்தார்கள். இது நாவலர் காலம். ஒரு நாவலர்-ஒப்பற்ற அவதார புருஷர் நாவலர்- சைவத்தையும், தமிழினத்தையும் காப்பதற்கு சிவபெருமானல் அனுப்பப்பட்டார்.

விளையும் பயிரை முளையில் தெரியும் என்பர். சைவத்தையும் தமிழையும் வாழ்விக்க வந்த தெய்வக் குழந்தைக்கு வயது மூன்று நிரம்பப்பெற்றது. அந்த மூன்று வயதுக் குழந்தை சிவா, கந்தா, முருகா, கடம்பா என்று குதலை மொழி பேசத் தொடங்கிற்று. இதனை யாரும் அக்குழந்தைக்குச் சொல்லிக்கொடுக்க வில்லை. அதுதானே சொன்னது. அது பழைய நினைவேயாம். இதற்கு முந்தி ஒரு குழந்தை மூன்று வயதில் "தோடுடைய செவியன்விடையேறியோர் தூவெண்மதி சூடி'' யென்று பாடிற்று- அக்குழந்தை சமணத்திலிருந்து சைவத்தை மீட்க வந்தது. நாவலர் பெருமான் சைவத்தை கிறிஸ்து மதத்திலிருந்து காப்பாற்ற வந்தவர். சம்பந்தர் காலத்தில் எல்லாம் செய்யுள் மயம்- நாவலர் பெருமான் உரைவேந்தராக வரவந்தவர். நாவலர் பெருமானுக்குக் கடல் மடை திறந்தாற்போல பாட்டுகள் வரும். ஆனால் அவருக்கு தேவார திருவாசகங்களான அருட்பாக்களே போதுமென்ற கருத்திருந்தது. ஆனதினாலே மூன்று வயதில் சிவனையும் முருகனையும் அழைத்தார். ஐந்து வயதில் குமரகுருபரர் கந்தர் கலிவெண்பா பாடினார். இவர்கள் மூன்று பேரும் தமிழ்நாட்டுத் தெய்வக் குழந்தைகள். இவர்களைப் போல வேறெந்த நாட்டிலும் அவதரித்தவர்கள் கிடையவே கிடையாது.

இனி, நாவலர் பெருமானின் அங்கலட்சணத்தைச் சிறிது கவனிப்போம்: சூம்பிய கையும் கால்களும், மிக மென்மையான உடம்பு. ஆனால் அளவுக்குமிஞ்சிய பெருந்தலை. அவருடைய உடம்பு, இந்தப் பெரிய தலையைத் தாங்குவதே கஷ்டமாயிருந்திருக்கும் அவரைச் சிறுவயதில் பானைத்தலையன்; வால்பேத்தையன் என்று பட்டஞ்சூட்டிப் பரிகசிப்பார்கள். நாவலர்பெருமானின் தலைக்கும் மற்றவர்களின் தலைக்கும் அநேக வித்தியாசம். பெருமான் தன் தலையைக் கொண்டே, மற்றெவராலும் சாதிக்க முடியாதவற்றைச் செய்து முடித்தார்.

ஒன்பது வயதுவரை அவரில் அடங்கியிருந்த பேராற்றலை மற்றவர் அறிந்திலர். ஒன்பது வயதில் ஒரு அபூர்வ சம்பவம், பெருமானின் அளப்பரிய ஆற்றலை வெளிப்படுத்தியது.

அவருடைய தந்தையார் கந்தப்பிள்ளை அப்போதிருந்த அரசாங்கத்தில் ஆராய்ச்சியார் வேலை பார்த்தவர், வைத்தியம் கற்றவர். வைத்திய நூல்கள் பல வசன நடையில் எழுதியவர். அந்த நூல்களை நாவலர் சபை தேடியெடுத்துச் சேகரிப்பது கடனாகும் இவர் நாடக நூல்களும் பல எழுதியுள்ளார். இசைத்தமிழும் நாடகத் தமிழும் சமணர் பௌத்தர்களின் இடைப்பட்ட காலத்தில் வளர்ச்சி குன்றின. இசையும் கூத்தும் காமம் பயப்பனவென்றெண்ணி, மதியீனத்தினால் ஒதுக்கப்பட்டன. நாவலர் பெருமானின் தந்தையார் செய்த இரு பெருந்தொண்டுகள்: 1. வைத்தியத்தை வளர்த்தது. 2. நாடகக் கலையை வளர்த்தது. வைத்தியம் இவர்களின் குடும்பத்தில் பரம்பரையாகவிருந்து வந்தது. கந்தப்பிள்ளையின் தகப்பனார் பெரிய ராசவைத்தியர். அவரின் தகப்பனார், அந்தக்காலத்தில் இலங்கைக் காவலராயிருந்த டச்சுத் தேசாதிபதிக்கு நேரிட்ட, மற்றவர்களெவராலும் சுகப்படுத்த முடியாத கொடிய நோயைச் சுகப்படுத்தி பேரும் புகழும் பொன்னும் முதலியார் பட்டமும் பெற்றவர்.

கந்தப்பிள்ளை வயது முதிர்ந்த காலத்தில் ஒரு நாடகமெழுதிக்கொண்டிருக்கும் பொழுது கையில் ஏடும் எழுத்தாணியுமிருக்கும் பொழுதுசிவனடிசேர்ந்தார். நாடகமெழுதி முற்றுப்பெறவில்லை. இதை ஒன்பது வயதுத் தெய்வக் குழந்தை உணர்ந்தது. அந்தக் குறையைக் குழந்தை நிறைவு செய்தது. இது ஆச்சரிய மன்றோ. இப்படி இந்த அதிசயத்தைக் கண்ட தமையன்மார் நால்வரும் தெய்வக் குழந்தையைக் கட்டித்தழுவி முத்தமிட்டு ஆனந்தக் கண்ணீர் உகுத்தார்கள். 'தாயோடு அறுசுவைபோம், தந்தையோடு கல்விபோம்' என்பது பாட்டெனினும் இந்தக் குழந்தையின் நான்கு தமயன்மாரும் தந்தையைப் போல் அவரின் கல்வியில் அக்கறைகாட்டினார்கள். (இந்நால்வரில் மூத்தவர் பெயர் தியாகராஜா, அடுத்தவர் பரமானந்தர். இவர் ஒரு பெரும்புலவர். மற்றிருவரது பெயர்கள் தெரியவில்லை.)

## நாவலருக்குமுன் கல்வி

நாலவர் காலத்திற்குமுன்னர் கல்வி நிலை மோசமாயிருந்தது. அந்தக் காலத்தில் மாணவர்களுக்கு புத்தகங்கள் கிடைக்கா. தனித்தனி ஏடுகளும் கிடைக்கா. மாணவர்கள் ஏடுகளை இரவலெடுத்து பிரதிசெய்து கொண்டு திருப்பிக்கொடுப்பார்கள். கொடுக்கும்பொழுது ஏடுகளைப்பிழைப்படுத்திக்கொடுப்பதுமுண்டாம். சில பண்டிதர்கள் தங்கள் காலத்தில் சேகரித்துவைத்த குறிப்புகளை தாமிறக்கும் பொழுது அவைகளைத் தங்கள் கண்முன்னே எரிக்கிரையாக்கியபின்தான் உயிர் துறப்பார்களாம். இந்தக் காலகட்டத்தில் எங்கள் பெருமான் திருவவதாரம் செய்து தமிழ்க் கல்வியில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார்.

(தொடரும்)

## ஜனநாயக...

(2ம் பக்கத்தொடர்ச்சி)

தினால் எல்லாம் சரியாக நடக்கும்.

தவறுகள் இருந்தால் அவற்றை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வருவதோடு ஒரு ஜனநாயகத்தில் மக்கள் திருப்தியடைந்துவிட வேண்டும். விரும்பினால் அவர்கள்அந்த அரசாங்கத்தையே அகற்ற முடியும். ஆனால் கலவரங்களில் ஈடுபட்டு தடைகளை உருவாக்கக் கூடாது. மாபெரும் தரைப்படையையும் கடற்படையும் கொண்ட ஒரு வெளிநாட்டு அரசாங்கம் அல்ல நமது அரசு. நமது அரசாங்கம் மக்களிடமிருந்துதான் ஆற்றல் பெறவேண்டும்.

**சிறுபான்மையினரின் உரிமைகள்**

வாக்குப் பதிவு எனும் சித்தாந்தத்தை நாம் அர்த்தமற்ற முறையில் பயன்படுத்தக் கூடாது. பெரும்பான்மையினரின் தீர்மானங்களுக்கு அடிமைகளாகிவிடக் கூடாது. அப்படிச் செய்வது வன்முறையை மேலும் தீவிரமாகப் பயன்படுத்துவதற்கு ஒப்பானதாகும். சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்து நடக்க வேண்டுமென்றால் அவர்களது கருத்துக்களுக்கும் செயல்களுக்கும் பெரும்பான்மையினர் மதிப்புக் கொடுக்கவேண்டும். சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்ளவேண்டும். சிறுபான்மையினரின் கருத்துக்களுக்கு செவிசாய்க்கும்படியும், அவர்கள் அவமானத்துக்குள்ளாகாமலும் பார்த்துக் கொள்ளவேண்டியது பெரும்பான்மையரின் கடமையாகும்.

(4-ம்பக்கத்தொடர்ச்சி)

எடுப்பதாகக் கூறப்படுகிறதே.

சின்னப்பாதேவர்: இனி வரும் படங்களில் கதைக்கு முக்கியத்துவம் இருக்கும். ஜனரஞ்சனமான படமாக இருக்கும். இதன் முன்னோடியாகத்தான் இப்போது 'அக்கா தங்கை' படம் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது.

## சிறுவனும் சிங்கமும்!

கேள்வி: ஆங்கிலப்படங்களைப் போன்று பிரமாண்டமான காட்சிகள் அமைத்து தொழில் நுணுக்க ரீதியாக ஒரு படம் எடுத்தால்என்ன?

பதில்: அதுமாதிரி படங்கள் வெற்றி பெறுவதில்லை. எனவே, அப்படிப்பட்ட படம் தயாரிக்கும் உத்தேசமும் என்னிடம் இல்லை. "சிறுவனும் சிங்கமும்'' என்ற பெயரில் ஒரு புதுமையானபடம்தயாரிக்கப்போகிறேன்.

இதில் காட்டுமிருகங்கள் அதிகம் இடம்பெறும். வால்ட்டிஸ்னி (ஆங்கிலப் படத்தயாரிப்பாளர்) பாணியில் இந்தப்படம் தயாரிக்கப்படும்.

## துணைவன்

கேள்வி: புராணப்படம் தயாரிப்பீர்களா?

பதில்: இல்லை.

கேள்வி: தங்கள் படங்களில் சண்டைக்காட்சிக்கு முதலிடம் தரப்படுகிறதே ஏன்?

பதில்: அதையும் ரசிகர்கள் விரும்புகிறார்களே. இப்போது தண்டாயுதபாணி பிலிம்சாரால் 'துணைவன்' என்ற படம்தயாரிக்கிறேன்.

இதில் சண்டைக்காட்சியோ, காதல் காட்சியோ இருக்காது. எம்பெருமான் முருகனின் பெருமைகளை விளக்குவதுடன் சிறந்த குடும்பக்கதை அம்சம் நிறைந்ததாகவும் இந்தப் படம் தயாரிக்கப்படுகிறது. இந்தப் படத்தின் மூலம் நாட்டில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படும்.

மே மாதம் முதல்வாரத்தில் இந்தப்படம் வெளியாகும்.

## எம். ஜி. ஆர்.—சிவாஜி

கேள்வி: சிவாஜிகணேசனை வைத்து படம் எடுக்கும்திட்டம் உண்டா?

ப: அவர் நடிப்பதற்கு ஏற்ற கதை என்னிடம் இல்லை.

சின்னப்பாதேவர் மேலும் கூறியதாவது:

தேவர் பிலிம்ஸ் சார்பில் நான்தயாரிக்கும்படங்களில் தொடர்ந்து எம். ஜி. ஆரே நடிப்பார். தேவர் பிலிம்ஸ் வெள்ளிவிழா படம் வரை எம். ஜி. ஆர். நடித்துக் கொண்டே இருப்பார்.

இவ்வாறு சினிமா அதிபர் சின்னப்பாதேவர் கூறினார்.

"இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் தமிழ்நாடு தி. மு. க. வுக்குமிடையில் தொடர்பு இருப்பதாக இங்கு சிலர் பேசிக் கொள்கிறார்களே?'' என்று ம. பொ. சி ஐயாவிடம் கடைசியாகக் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் "கொள்கையில் உடன்பாடிருக்கலாம்; அவர்கள் வழியை இவர்கள் பின்பற்றலாம். ஆனால் எந்தவித அரசியல் தொடர்பும் கிடையாது'' என்றார்.

## இனிய நினைவு

-யாழ்ப்பாணத்தில் அவர் தங்கியிருந்த இரு தினங்களில் அவருடன் நான் செலவிட்ட இரு மணிநேரமும் இனிய நினைவாய், இதயத்தில் பசுமையாய் பதிந்து விட்டது.

"உப்புக் கடல் நம்மைப் பிரித்தாலும், தமிழர்களாகிய நம்மையாராலும் பிரிக்க முடியாது'' என்று முன்னர் ஒரு தடவை ம பொ. சி. ஐயா அவர்கள் இலங்கைக்கு வந்திருந்த சமயம் குறிப்பிட்டார். அவர் சொன்னதுபோல, தமிழ் நாட்டில் அவர் பிறந்தாலும் அவர் தமிழ் நெஞ்சம் தமிழுலகத்துக்குச் சொந்தம்.


## விளம்பரம்

### மயிலிட்டி கிராமசபையின் கேள்வி விளம்பரம்

மயிலிட்டிக் கிராமசபைத் தலைவரால் கட்டுவன்தெற்கு (17-ம் வட்டாரம்) ஆள்விழுந்தான் ஒழுங்கைத் திருத்த வேலைக்கும், குரும்பசிட்டி (5-ம் வட்டாரம்) தேவசுகிரிரோட் திருத்தவேலைக்கும் 30-4-69 காலை 9-30 மணி வரைக்கும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ரூபா 25/-ம், கேள்விப் பத்திரச் செலவு ரூபா 10/-ம் கட்டிக் கிராமசபைக் கந்தோரில் 28-4-69 நண்பகல் 12 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கொண்டு இவ் வேலைகள் பற்றிய விபரத்தை கிராமசபைக் கந்தோரில் வேலை நேரங்களில் அறிந்துகொள்ளளாம்.

(ஒப்பம்)
வ. கிருஷ்ணசாமி,
தலைவர்
கிராமசபை மயிலிட்டி.

கிராமசபை அலுவலகம்,
மயிலிட்டி,
காங்கேசன்துறை,
11-4-69. 1517


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமிர்தலிங்கம் விளக்குகிறார்:

# தமிழரசுக் கட்சியின் எதிர்காலத் திட்டமென்ன?

நமது நிருபர்கள் கா. யோகநாதன் - பெரி. சுந்தரலிங்கம்

''தமிழ் அரசாங்க ஊழியர்களை சிங்களம் படிக்கும்படி 1960-ம் ஆண்டு நாம் கூறினோம். 61-ம் ஆண்டு சத்தியாக்கிரகம் நடப்பதற்குமுன்னர் தமிழரசுக் கட்சித்தலைவர் பழையஊழியருக்கு சிங்களம் தேவையில்லையென்றும், புதியஊழியர் சிங்களம் படிக்கவேண்டும் என்றும் தெட்டத்தெளிவாக யாழ்ப்பாணத்தில் கூறினார். சிங்களம் படிக்கவேண்டுமென்று நாங்கள் கூறியபின்னரும் சிங்களம் படிக்க முன்வராதவர்கள், தங்கள் வேலைகளை இழந்தபின்னர் எங்களை குறை சொல்வது தவறு.''

தமிழரசுக் கட்சிப்பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டை எம். பி. யுமான திரு. ஏ. அமிர்தலிங்கம் தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்னைபற்றி நமது நிருபர்கள் கேட்ட கேள்விக்கு மேற்கண்டவாறு பதிலளித்தார்.

தமிழரசுக் கட்சித் தலைமைக் காரியாலயத்தில் நடந்த பிரத்தியேக பேட்டியொன்றில், தமிழ்பேசும் மக்களை எதிர்நோக்கியுள்ள பல பிரச்னைகள்பற்றிய கேள்விகளுக்கும் அவர் பதில் அளித்தார். நமது நிருபர்கள் கேட்ட கேள்விகளையும், திரு. அமிர்தலிங்கம்அளித்த பதில்களையும் தருகிறோம்.

## 60-ம் ஆண்டே சொன்னோம்

கேள்வி:- தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம்படிக்க வேண்டும் என்பதை 60-ம் ஆண்டே கூறினீர்களா?

பதில்:- ஆம். புதிய ஊழியர்கள் சிங்களம் படிக்க வேண்டிவரும் என்பதை 60-ம் ஆண்டே நாங்கள் ஒப்புக்கொண்டு, அவர்களை சிங்களம் படிக்கும்படி பல தடவை கூறினோம்.

கேள்வி:- பழைய ஊழியர்கள் பற்றி என்ன கூறினீர்கள்?

பதில்:-அவர்கள் சிங்களம் படிக்கத்தேவையில்லையென்று.

கேள்வி:- தேசிய அரசாங்கத்தில் சேர்ந்தபின், தமிழ் அரசாங்க ஊழியர்களின் பிரச்னைகளைக் கவனித்தீர்களா?

பதில்:- பழைய ஊழியர் சிங்களம் படிக்கத்தேவையில்லையென அரசாங்கத்தை சுற்றறிக்கை வெளியிடச் செய்தோம். எங்கள் சொல் கேட்டு சிங்களம் படிக்காமல்விட்ட ஊழியர்களுக்கு மேலும் 3 வருட அவகாசம் பெற்றுக்கொடுத்தோம். முதலில் புதிய ஊழியருக்கு 3 வருட அவகாசம்மட்டுமே வழங்கப்பட்டது.

கேள்வி:- வேறு சலுகைகள் பெற்றுக்கொடுத்தீர்களா?

பதில்: இந்த கால எல்லைக்குள் சித்தியடைந்தவர்களுக்கு ஆரம்பகாலச் சம்பளம் கிடைக்கவும் வழிசெய்தோம்.

கேள்வி:- அப்படியானல் சுரேந்திரநாதன் போன்ற சிலருக்கு ஏன் வேலை நீக்க நோட்டீஸ்வழங்கப்பட்டது?

பதில்:-சிங்களம் படிக்க வேண்டும் என்று நாங்கள் கூறியபின்னரும் இவர்கள் சிங்களம் படிக்காமல்விட்டார்கள். இதனல் இந்த நிலைமை ஏற்பட்டது.


### இதுவரை பெற்ற உரிமை என்ன?

கேள்வி:- கடந்த நான்கு பொதுத் தேர்தல்களிலும், தமிழ் பேசும் மக்கள் உங்கள் கட்சியை பெரும்பான்மையாக தெரிந்து அனுப்பினார்கள். அதே நேரம் ஆட்சி மன்றத்திற்கு வெளியிலும், மக்கள்உங்களுக்குமுழுஒத்துழைப்பையும்வழங்கினர்கள். ஆட்சி மன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தமிழரசுக்கட்சிக்குமக்கள் அளித்த ஆதரவைப்போல் வேறு எந்தக் கட்சிக்கும் அளிக்க வில்லை. இவ்வளவு காலமாகவும் நீங்கள் பெற்ற உரிமைகளைக்கூறுவீர்களா?

பதில்:- தமிழ் மக்கள் தங்கள் வாக்குரிமையைமட்டுமே நமக்கு தந்தார்கள். உரிமை போராட்டங்களில் தமிழ் மக்கள் எல்லாரும் கலந்துகொள்ளவில்லை. கட்சித் தொண்டர்கள்மட்டுமே கலந்துகொண்டார்கள் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் நமது கோரிக்கைகளுக்கு இடையூருக நின்றனர். தமிழ்காங்கிரஸ் தலைவர் 61-ம் ஆண்டு நடந்த சத்தியாக்கிரகத்தை எதிர்த்தார். ஆட்சிமன்றத்தில்கூட தமிழ் கங்கிரஸ் தலைவர், ஒவ்வொரு விஷயத்திலும் தம்மை எதிர்த்துக் கொண்டே வந்திருக்கிறார், முதலில் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்தார். ஆட்சி மன்றத்தில் மட்டுமல்ல, வடபகுதியெல்லாம் கூட்டங்கள் வைத்து முழுமூச்சாக எதிர்த்தார். பின் மாவட்ட சபையை எதிர்த்தார். பின் தமிழ் பல்கலைக கழகத்தை எதிர்த்தார். இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் எதிர்ப்பு இருக்கும் போது நமது உரிமைகளைத் தருவார்களா? 60-ம் ஆண்டு தமிழ்க் காங்கிரஸ் தலைவர், ஆட்சிமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படாதபொழுதிலும், அவர் ஆட்சிமன்றத்திற்கு வெளியில், நாம் நடத்திய அறப்போராட்டத்தை எதிர்த்தார். இப்படியான நிலைமையில் எப்படி எமது உரிமைகளைப் பெற முடியும். தமிழ் மக்கள் தமிழ்க் காங்கிரஸில் 3 உறுப்பினர்களைத் தெரிவு செய்யாமல் விட்டிருந்தால் மாவட்டசபை மட்டுமல்ல, தமிழ் பல்கலைக் கழகமும் கிடைத்திருக்கும்.

கேள்வி: ஆட்சிமன்றத்திற்கு தமிழ்க் காங்கிரஸில் ஒருவருமே தெரிவு செய்யப்படவில்லையென வைத்துக் கொள்வோம். கிழக்கு மாகாணத்தில், முஸ்லிம் உறுப்பினர்களும், சுயேச்சையாக வரும் தமிழ் உறுப்பினர்களும் சமஷ்டிக் கோரிக்கையை எதிர்த்துக்கொண்டு தானே இருப்பார்கள்?

பதில்: அவர்கள் எதிர்ப்பு அவ்வளவு பலமானதாக இருக்காது. அவர்கள் தனிப்பட்ட பிரதிநிதிகள். அர



கேள்வி: யு. என். பி. கட்சியும் ஸ்ரீலங்கா கட்சியும் தான் இந்நாட்டில் மாறி மாறி பதவிக்கு வரக்கூடிய நிலைமையிருக்கிறது. இவ்விரு கட்சிகளும் சமஷ்டி கோரிக்கையை ஏற்கவில்லை யென்பது தெரிகிறது இந்த நிலைமையில், போராட்டம் நடத்தினலும் எப்படி சமஷ்டி ஆட்சியைப்பெற முடியும்? எந்த அரசாங்கம் சமஷ்டி ஆட்சியைக் கொடுக்கும்?

பதில்: கண்டிப் பகுதியில் உள்ள சிங்கள மக்கள் சமஷ்டி ஆட்சியின் அவசியத்தைப்பற்றி உணர்ந்துள்ளார்கள். சமஷ்டிகோரிக்கை அங்கு அரசியல் இயக்கமாக வளரவில்லை சமஷ்டி கோரிக்கை அங்கு வலுப்பெற்றதும், அவர்களுடன் சேர்ந்து நாங்கள் நடவடிக்கை எடுப்போம்- அரசியல் திட்ட திருத்த குழுவிடம், கண்டிப் பகுதி சிங்கள மக்கள், சமஷ்டி கோரிக்கையை வலியுறுத்தி 4 மகஜர்களைச் சமர்ப்பித்துள்ளனர். மாவட்டசபை மசோதாவை அரசாங்கம் கைவிட்டாலும், அரசியல் அதிகாரத்தை பரவலாக்கும் நடவடிக்கை கட்டாயம் நடக்கும். இது ஒரு காலத்தில் சமஷ்டிக்கு வழிவகுக்கும்.

கேள்வி:- வடக்கு கிழக்கு மகாணங்களில் தமிழரசுக் கட்சியை, தமிழ் மக்கள்

ளர்களையும் தமிழ் மக்கள் தெரிவுசெய்துவிடுகின்றனர். இதன் காரணமாகத்தான் நமது உரிமைப்போராட்டத்திற்கு இடையூறு ஏற்படுகிறது.

கேள்வி:- இந்தியாவில் தேசிய காங்கிரஸ் விடுதலைக்காகப் போராடிய நேரத்தில் ஜஸ்டிஸ் கட்சி காங்கிரஸிற்கு எதிராகத் தானே இருந்தது. ஒவ்வொரு நாட்டிலும் சில பகுதியினர் எதிர்த்துக்கொண்டுதான் இருப்பார்கள். ஆகலால் ஒரு சிலர் உங்கள் போராட்டத்திற்கு எதிர்ப்பாக இருப்பதால் வெற்றிபெறவில்லையென்று கூற முடியுமா?

ப- ஜஸ்டிஸ் கட்சியை தேசிய காங்கிரஸ் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. கடைசி நேரத்தில் இந்திய மக்கள் எல்லாரும் ஏகோபித்து விடுதலைப் போராட்டம் நடத்தினர்கள்.

### எதிர்கால திட்டம்

கே- உங்கள் எதிர்காலப் போராட்டத் திட்டங்களைக் கூறுவீர்களா?

ப- திட்டங்கள் இன்னும் தயாரிக்கப்படவில்லை உடனடியாகப் போராட்டம் நடைபெருது. முதலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிரசாரம் செய்து கிளைகளை ஆரம்பித்து கட்சியைப் பலப்படுத்தி தொண்டர்களை தொகுதி ரீதியாக சேர்த்தபின்னரே போராட்டத் திட்டங்களை தயாரிப்போம்.

கே- 61ம் ஆண்டு சத்தியாக்கிரகம் தமிழ் பகுதியெங்கும் நடந்தது. அதனல் தமிழ்மக்களின் உரிமைகளில் ஏதாவது கிடைத்ததா?

ப- போராட்டம் உடனடியாக பலனளிக்கும் என எதிர்பார்க்க முடியாது. இந்திய விடுதலைக்காக தேசிய காங்கிரஸ் 90 வருடங்கள் தொடர்ச்சியாகப் போராடி விடுதலை பெற்றது. என்ருே ஒருநாள் உரிமை பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் போராடி விடுதலை பெற்றுர்கள். அதேபோல் நாமும் தொடர்ச்சியாக பல போராட்டங்களை நடத்த வேண்டும். சூழ்நிலை வரும்போது நமது உரிமைகள் கிடைக்கும்.

கே- எதிர்வரும் போராட்டம், மொழிப் போராட்டமா அல்லது சமஷ்டிக் கோரிக்கைப்போராட்டமா?

ப- அதைப்பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை. 56ம் ஆண்டு காலிமுகக் கட

## யாழ். காரியாதி காரி பிரிவு விவசாய மன்னர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம், காரியாதிகாரி பிரிவின் இவ்வருட விவசாய மன்னராக திரு என். செல்லத்துரை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஓர் ஏக்கருக்கு மிகக் கூடுதலாக 80.8 புசல் நெல் உற்பத்தி செய்ததால் இவர் யாழ்ப்பாணம் காரியாதிகாரி பிரிவு விவசாய மன்னராகத் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இரண்டாவது விவசாய மன்னராகத் தொரியப்பட்டிருக்கும் என். அருளம்பலம் ஒரு ஏக்கருக்கு 46.4 புசல் நெல் உற்பத்தி செய்திருக்கிறார்.

மூன்ருவது இடத்தைப் பெற்றிருக்கும் திருமதி ரி. மாணிக்கவாசகர் 26 1/4 புசல் நெல் உற்பத்தி செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கா. நி)

## அப்போலோ-11

வாஷங்டன், ஏப் 15

அப்போலோ-11 ல் பயணம் செய்யும் விண்வெளி வீரர் சந்திரனில் காலை வைக்கும் முதல் அதிர்ஷ்டசாலி ஆகிருர் என்று விண்வெளி ஆராய்ச்சி நிலையம் தெரிவித்தது.

அப்போலோ-10 மே மாதம் விண்வெளிக்கு அனுப்பப்படுகிறது. இது சந்திரனில் இறங்குவதற்கு 'ஒத்திகை' யாகும்!

## 19கொலைகள்

கொழும்பு, செவ்.

புத்தாண்டு தினத்திலும் அதற்கு முதல் தினத்திலும் நடந்த கொலைகள் 19 என இப்போது பதிவு செய்யப் பட்டுள்ளது.

## மதுவிலக்கை அமுல் நடத்த தமிழக அரசு நிபந்தனை

மதுரை, ஏப். 15

மத்திய அரசாங்கம் 20 கோடி ரூபாய் தந்தால் தான் தமிழ்நாட்டில் மதுவிலக்கை அமுல் நடத்த முடியுமென்று தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. மு. கருணநிதி மதுரையில் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

பெருந்தொகையான நஷ்டம் ஏற்படுகிறதென்றும். அதனல் இப்பணம் அவசியம் தேவைப்படுகிறதென்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசாங்கம் இத்தொகையைத் தராவிடில் மதுவிலக்கு சம்பந்தமாக மறு பரிசீலனை செய்யவேண்டிய நிலைமை ஏற்படுமென்றும்திரு கருணநிதி மேலும் தெரிவித்தார்.


## வேம்படி மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம்

சித்திரை மாதம் 18-ந் திகதி வெள்ளிக்கிழமை (18-4-69) தொடங்கவிருந்த வேம்படி மகளிர் கல்லூரி வைகாசி மாதம் 9-ந் திகதி வெள்ளிக்கிழமை (9-5-69) தொடங்குமென அறிவிக்கப் படுகிறது.

அதிபர்.

1522

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
PrePoya Poya 10-30 a.m
SABU
in
THIEF OF BAGDAD
(English)

ராஜா 93வது தினம் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

REGAL at JAFFNA
Daily 4-45, 7 9-45 p.m.
PrePoya Poya 10-30 A.M.
Deborah Kerr,
David Niven
in
EYE OF THE DEVIL

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி ஆர்.-ஜெயலலிதா நடித்த
ஆயிரத்தில் ஒருவன்

வண்ணை சிறீ வெங்கடேச வரதராஜப்பெருமாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை சிறீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

எங்கும் பரந்துள்ள அருட்பெருங் கடலாகிய ஆண்டவனை மிகப் பழங் காலத்திலே ஞாலமும் பக்தியும் வாய்ந்த மேலோர் பலர் உருகிப் போற்றி வேண்டி, வேண்டிய வண்ணமாக வடித்து வரைந்து வழிப்படுத்திப் பல் வேறிடங்களில் நிலை கொள்ளச் செய்து உபகரித்துள்ளனர். இந்தவிதமாக அந்தந்த மேலோர்களும் உகந்து அழைத்த வடிவங்களையும் பெயர்களையும் தாங்கி எழுந்தருளியுள்ள இடங்களே தேவாலயங்கள் என்று சொல்லப்படுவன. எங்கும் வியாபித்திருக்கும் இறைவன் மேலோர்கள் முயன்று கண்ட ஆலயத்தி லுள்ள உருவங்களிலேயும் வீற்றிருப்பான் என்பதில் ஒரு சிறிதும் நமக்குச், சந்தேகம் வேண்டுவதில்லை.

இவ்விதப் பெருமையும் பழமையும் வாய்ந்த ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் ஈழத்திற் சிறந்த வைணவ ஆலயங்களுள் ஒன்றுகும். யாழ்ப்பாணப் பட்டினத்தில் எழுந்தருளியிருக்கும் இக் கோயில் மது பண்டாரவாளச் செட்டிப் பிள்ளைகள் என்றழைக்கப்படும் பத்மசாலிகளை அங்கத்தவர்களாகக் கொண்ட ஆதீன மகாசபையாரால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இச்சபையார் தாம் நியமனம் செய்த ஐந்து தர்மகர்த்தாக்கள் மூலம் இக்கோயிலைச் செவ்வனே பரிபாலித்து வருகின்றனர்.

இக்கோயிலுக்கு ஒரு பெரிய அசையா மணியும் அதை அமைப்பதற்கு ஓர் கோபுரமும் தூரத்திலிருந்து வரும் வழிபடுவோர் தங்கி இளைப்பாறிப் போவதற்கு ஒரு மடாலயமும் இல்லாதது பெருங்குறைபாடுகளாகும். பிரபல தொழிலதிபர் திரு. சிவாஜிதுரை தம்பதியினரின் புதல்வியும், திருமதி கமலா ஜோன்பிள்ளை — கமலாலயம். திரு. தண்டாயுதபாணிபிள்ளை சென்னை ஆகியோரின் சிஷ்யையுமான நாட்டியச்செல்வி கீதாஞ்சலி மேற்கூறிய திருப்பணிகளில் முதல் இரண்டையும் செய்து முடிப்பதற்கு 15-5-69ல் யாழ்நகரமண்டபத்தில்- ஒரு நாட்டிய விருந்து அளிக்க முன்வந்ததற்கு மேற்படி தேவஸ்தான ஆதீன மகாசபையார் அன்பு கலந்த நன்றியைச் செலுத்துகின்றனர். பக்தகோடிகள் இக் கைங்கரியம் நிறைவேறுவதற்குத் துணைபுரிவார்களாக.

## பிரிட்டிஷ்

# சர்வ கலாசாலைகளில் 295 இலங்கை மாணவர்கள்

லண்டன், ஏப் 15

1967-68 ஆண்டில் மொத்தம் 16,000 வெளிநாட்டு மாணவர்கள் பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளில் முழுநேர மாணவர்களாக பயின்றுவந்தனர். 295 மாணவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்களில் 125 பேர் லண்டன் சர்வகலாசாலையிலும், 28 பேர் கேம்பிரிட்ஜிலும், 19 பேர் மான்செஸ்டர் சர்வகலாசாலையிலும் பயின்றனர்.

சாம்ராஜ்ய சர்வகலாசாலைச் சகம் அண்மையில் வெளியிட்ட புள்ளிவிபரங்களில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக அதிகப்படியான மாணவர்களை இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்திருப்பது இந்தியாவாகும். 1429 இந்திய மாணவர்களும், 899 பாகிஸ்தானிய மாணவர்களும் இக்காலகட்டத்தில் பிரிட்டனில் பயின்று வந்தனர்.

பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளில் பயின்றுவந்த மொத்தம் 16,045 வெளிநாட்டு மாணவர்களில் 9052 பேர் உயர் பட்டதாரி மாணவர்களாவர். 18,000 க்கும் மேற்பட்டோர் உபகார நிதிச்சலுகைகள் பெற்று பிரிட்டனில் பயிற்சியை மேற்கொண்டனர்.

இவ்வெளிநாட்டு மாணவர்கள் பல்வேறு துறைகளில் உயர்கல்வி பெற்று வருகிறார்கள். குறிப்பாக, வைத்தியம், பொறியியல் தொழில்நுட்பம், மிருகவியல், வனவியல், உயிரியல், பௌதிக விஞ்ஞானம், நிர்வாகம், வர்த்தகம், நகரத் திட்டம், இலக்கியம், கலை ஆகியன இவற்றில் அடங்கும்.

## 80 ஏக்கரில் காய்கறி

கண்டி, செவ்.

கண்டி மாவட்டத்தில் 80 ஏக்கர் நிலத்தில் காய்கறித் தோட்டம் பயிர்ச் செய்கைகு உட்படுத்தப்படவுள்ளது 50 ஏக்கரில் பயிர்ச் செய்கைக்கான நடவடிக்கைகள் பூர்த்தியாகி விட்டன.

இங்கு 40 இளைஞர்கள் குடியமர்த்தப் படுவார்கள். சகல விதமான வசதிகளும் இவர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்.

வரும் தமிழ் உறுப்பினர்களும் சமஷ்டிக் கோரிக்கையை எதிர்த்துக்கொண்டு தானே இருப்பார்கள்?

பதில்: அவர்கள் எதிர்ப்பு அவ்வளவு பலமானதாக இருக்காது. அவர்கள் தனிப்பட்ட பிரதிநிதிகள். அரசாங்கம் அவர்களைச் சமாளித்துவிடும். தமிழ்க்காங்கிரஸ் ஒரு கட்சியாக இயங்குவதாலும், தேசிய அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிப்பதாலும் தான் இந்த நிலைமை.

கேள்வி: சுயேச்சை உறுப்பினர்களை விட்டுவிட்டாலும் உங்கள் கோரிக்கைக்கு எதிர்க்கட்சி என்றும் எதிர்த்துக் கொண்டுதானே இருக்கும்.

பதில்: அந்த நிலைமை இருக்காது. உதாரணமாக மாவட்டசபை மசோதா பற்றி சிங்கள மக்கள் மத்தியில், எதிர்க் கட்சியினர், பிரசாரம் செய்யு முன்னரே அதை ஆட்சி மன்றத்தில் நிறைவேற்றியிருக்கலாம். தமிழ்க் காங்கிரஸ் தலைவர் தான் மாவட்டசபை மசோதாவை 6 மாதங்கள் பின்போடச் செய்தார். அவர் பின் போடச் செய்யாவிடில் மசோதா நிறைவேறியிருக்கும்.

கேள்வி: தமிழரசுக் கட்சி 16 வருட காலம் எதிர்க்கட்சியிலிருந்து அரசாங்கத்தை எதிர்த்துக்கொண்டிருந்தது. பின் 4 வருடங்கள் அரசாங்கத்தை ஆதரித்தது. மொழி உரிமைக்காக 56 ல் காலிமுக கடற்கரையிலும், 61-ம் ஆண்டு தமிழ் பகுதிகளிலும் சத்தியாக்கிரகம் செய்தது. உரிமைகள் பெறுவதற்காக காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவுடனும், பின் பிரதமர் டட்லி சேனநாயக்காவுடனும் ஒப்பந்தம் செய்தது சிறிமா அரசாங்கத்திற்கும் ஓரளவு ஆதரவு வழங்கியது. இப்படி பல வழிகளாலும் உரிமைகளை பெற முயற்சி எடுத்தும் பயனில்லாமல் போய்விட்டது. இனிமேல் என்ன வழிவகைகளை கையாளப்போகிறீர்கள்?

### ஒரு காலத்தில் சமஷ்டி கிடைக்கும்

பதில்: ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கமும் சமஷ்டி கோரிக்கையை தானுக விரும்பிக் கொடுக்காது. மக்கள் போராடித்தான் உரிமையைப் பெறமுடியும். சமஷ்டி கோரிக்கையை ஓர் அரசியல் வளர்ச்சிமூலம் பெற முடியும் என்று நாம் எதிர்பார்க்கிறேம். கட்டுப்பாடுடனும் விடாப்பிடியாகவும் இருந்தால், ஒரு காலத்தில் நமது கோரிக்கை கிடைக்கும். அரசியல் அதிகாரத்தை பரவலாக்கும் நடவடிக்கை கட்டாயம் நடக்கும். இது ஒரு காலத்தில் சமஷ்டிக்கு வழிவகுக்கும்.

கேள்வி:- வடக்கு கிழக்கு மகாணங்களில் தமிழரசுக் கட்சியை, தமிழ் மக்கள் ஒரே கட்சியாக தெரிந்து அனுப்பினுல் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமா?

பதில்:- ஈழத் தமிழினத்தின் விடுதலைக்காகப் பாடுபட்டுவரும் ஒரு கட்சி தமிழரசுக்கட்சிதான். இந்தியாவில் தேசிய காங்கிரஸ்தான் விடுதலைக்காகப் பாடுபட்டது. இந்திய மக்கள் தேசிய காங்கிரஸின் கீழ் ஒன்றுகூடி போராடினுர்கள். விடுதலை கிடைத்தது. இங்கு தமிழரசுக்கொடியின்கீழ், தமிழ் மக்கள் எல்லாரும் ஒன்றுகூடும் நிலைமை உருவாகவில்லை. அந்த நிலைமை ஏற்பட்டால் உரிமை பெருமை பெறுவதில் கஷ்டமிருக்காது. எங்களைப் பெரும்பான்மையினராக தெரிவு செய்யும் அதே நேரத்தில், தமிழ் காங்கிரஸில் ஒரு சிலரையும், சில சுயேட்சையாகள் கிடைக்கும்.

கே- எதிர்வரும் போராட்டம், மொழிப் போராட்டமா அல்லது சமஷ்டிக் கோரிக்கைப்போராட்டமா?

ப- அதைப்பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை. 56ம் ஆண்டு காலிமுகக் கடற்கரையிலும், 61ம் ஆண்டு தமிழ்ப்பகுதிகளிலும் நடந்த போராட்டம் மொழிப் போராட்டமே. இந்தியாவில் தேசியக் காங்கிரஸ் காலத்திற்கு காலம் பல பிரிவுகளாக போராட்டம் நடத்தினுர்கள். ஆனுல்விடுதலைதான் அவர்களின் குறிக்கோளாக இருந்தது. அதேபோல்தான் நமது போராட்டங்களும் பல பிரிவுகளாக இருந்தாலும் சமஷ்டி ஆட்சிதான் நமது குறிக்கோள்.

கே- தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்னைக்காகவும் போராடுவீர்களா?

ப- இன உரிமையில் ஒரு சிறு அம்சம்தான் தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்னை. விடுதலை இயக்கத்தை இப் பிரச்னைக்காக நடத்த முடியாது.

## ரயிலில் விட்ட

# ரூ. 5,000 பொருட்கள் உரியவரிடம் சேர்ந்தது

வல்வெட்டித்துறை, செவ்

புத்தாண்டுக்கு முதல் நாள் காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட யாழ்தேவியில் தவறவிட்ட 5000 ரூபாய் பெறுமதியான சூட்கேசும் பொருட்களும் அன்று மத்தியானம் அனுராதபுரம் புகையிரத நிலையத்தில் வைத்து அதன் சொந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இரத்தினபுரி மாஜிஸ்திரேட் கோட்டில் பிரதம லிகிதராக கடமையாற்றி வரும் வி. வயிரமுத்து என்பவர் விஷேச வைபவமொன்றுக்காக 5000 ரூபாய் பெறுமதியான பொருட்களுடன் சம்பவதினம் காலை யாழ்தேவியில் புறப்படவிருந்தாராம். பொருட்கள் கொண்ட சூட்கேசை புகையிரதத்திற்குள் வைத்துவிட்டு வெளியில் சென்று வருமுன் புகையிரதம் புறப்பட்டுவிட்டதாம். உடனே அவர் கொழும்பிலிருந்து புகையிரத நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருளை எடுத்துத்தருமாறு தகவல் கொடுத்தாராம். அதன் பின்னர் அவர் பகல் புகையிரதத்தில் புறப்பட்டு ஒவ்வொரு புகையிரத நிலையங்களிலும் தனது பொருள் பற்றி விசாரித்தும் அகப்படவில்லை. கடைசியாக அனுராதபுரத்தில் வைத்து புகையிரத பாதுகாப்பு சேவையாளர் திரு குலதுங்காவும் அவருடைய உதவியாளர்களும் அப்பொருளை உரியவரிடம் ஒப்படைத்தனர்.

## சைவஇளைஞர் சங்கம்

ஊர்காவற்றுறை, செவ்.

சரவணை தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தைச் சேர்ந்த சைவ இளைஞர் சங்கம்' என்ற ஸ்தாபனம் ஒன்றை வித்துவான் இ. பொன்னையா சென்ற சனிக்கிழமை மாலை ஆலயமண்டபத்தில் ஆரம்பித்து வைத்தார்.

திருநாவுக்கரசு நாயஞர் குருபூசைத் தினத்தைக் கொண்டாடவேண்டுமெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது, பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

போஷகர்கள்- வித்துவான் இ. பொன்னையா. ஆசிரியர் திரு. பொ. சுப்பிரமணியம். தலைவர்-திரு. வே. குணரத்தினம். உபதலைவர்- திரு. நா. சிவராசா, காரியதரிசிகள்- திரு. த. நாதன், திரு. ந சற்குணபாலன், தனுதிகாரி. திரு. சோ. தனபாலசிங்கம்.


## வரி விளம்பரம்

### தேவை

எமது பெட்ரோல்நிலையங்களில் கடமையாற்ற ரூபா 3000/- பிணைப்பணத்துடன் மனேஜர்கள், ரூபா 250/- பிணைப்பணத்துடன் பம்பர்கள், எமது ஸ்தாபன வாகனங்களில் கடமையாற்ற வான் சேல்ஸ்மன்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 938

REGAL at JAFFNA
Daily 4-45,7 9-45 p.m.
PrePoya Poya 10-30 A.M.
Deborah Kerr,
David Niven
in
EYE OF THE DEVIL
[Adults]

(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி ஆர்.-ஜெயலலிதா நடித்த
ஆயிரத்தில் ஒருவன்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30க்கு மட்டும்
சிவாஜி — சரோஜாதேவி நடித்த
என் தம்பி

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி — தேவிகா நடித்த
லவ னம்

ராணி
[யாழ்ப்பாணம்]
[தினசரி 4காட்சிகள்]
* ஜெய்சங்கர்
* விஜயகுமாரி
நடித்த
ஜீவனும்சம்

இங்ஸ்லி-மைலன், (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன், (யாழ். நகர்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை)
மற்றும் சினிமாஸ் திரைகளில்




கலைப்பேரரசர் எம். ஜி ஆர்.
ஆடலழகி ஜெயலலிதா
எம். ஆர். ராதா, நாகேஷ், மனேரமா
மற்றும் பலர் நடிந்த
சர வணுபிலிம்ஸ்
சந்திரோதயம்
டைரக்ஷன்: கே. சங்கர்

4-வது வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு)
முத்துராமன், ராஜன், பாரதி, பானுமதி நடித்த
பூவும் பொட்டும்



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் லக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org